கணக்குப்பதிவுநூற்பரீட்சை குறிப்பிட்டபடி 1916௵ ஜனவரி௴ 30உ நடந்தேறியது. இப்பரீட்சைக்குவர விண்ணப்பம் செய்து கொண்டவர் நால்வர். கோயமுத்தூர் ஜில்லா, திருப்பூரில், ஸ்ரீமான் Dr. P. வரதராஜலு நாயுடு அவர்கள் மேற்பார்வையில் பரீட்சிக்கப் பெறவிருந்த இருவர் பரீட்சைக்கு வரவில்லை. அடியிற் குறிக்கப்பெற்ற இருவர் திருச்சிராப்பள்ளியில் பண்டிதர் ஸ்ரீமான் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் மேற்பார்வையில் பரீட்சிக்கப் பெற்றுத் தேறியிருக்கிறார்கள்.

௧. T. A. கனகசபாபதி பிள்ளை, 16 தொண்டைமான் சந்து, திருநெல்வேலி—இரண்டாவது வகுப்பு—இரண்டாவது பரிசு வெள்ளிப்பதக்கமும், தகுதிச்சீட்டும்.

௨. உமையொருபாகம் பிள்ளை, தலைமை உபாத்தியாயர், R. V. கஸ்தூரிப்பள்ளிக்கூடம், கொங்கன்குளம், மாரனேரி போஸ்டு, சாத்தூர் தாலூகா-இரண்டாவது வகுப்பு—தகுதிச்சீட்டு.

௬. கல்விக்காகப் பொருளுதவி.

தஞ்சை, கருந்திட்டைக்குடி, நாராயணக்கொத்தன் தெருவிலிருக்கும் கோ. அமிர்தலிங்கம் என்னும் மாணவர் தம் படிப்

பிற்குச் சங்கத்திலிருந்து பணவுதவி நாடி எழுதிய மனுவின் பேரில், அதற்காகத் தம்பெயரை வெளியிடாது பணம் உதவிச் சங்கத்தைக் கௌரவித்த ஒரு புண்ணிய சீலரின் நன்கொடையிலிருந்து, மாதம் மூன்று ரூபாவீதம் மனுதாரருக்கு அவர்தம் யோக்கியதையைப் பொறுத்துக் கொடுத்து வருகிறதென்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வுண்மைத் தமிழபிமானியின் மேலான நோக்கம் மற்றைத் தமிழ்ச்செல்வர் பாலும் நிகழ்ந்து தமிழச்சிறுர்களில் பொருட் பேறின்றிக் கல்விப்பயிற்சியில் நழுவிவிழுவாரைக் கைதூக்கிவிடுமாறு அருள்புரிய எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளைச்சபை.

திருச்சியில் தாபித்துள்ள நமது கிளைச்சபை, தாய்ச்சங்கத்தொடு ஒற்றுமை பூண்டு சங்கமுன்னேற்றத்திற்கு வேண்டியபடி உழைக்கும் அபிமானிகளே பொருந்திய தொன்றுயிருக்கிறது. இக்கிளைச்சங்கத்தின் ஆதரவில் ஏற்படுத்திய மாணவர் விடுதிக்கு இதன் அங்கத்தினர்பலரும் கூடியவரை மெய்யுதவி கையுதவிபுரிந்து வந்திருக்கின்றனர். இவர்கள் தத்தமக்குரிய கௌரவநிலையினைச் சிறிதும் பொருட்படுத்தாமல், மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்டுஞ்சார், செவ்வியருமையும் பாரார், அவமதிப்புங்கொள்ளார், கருமமேகண்ணுயினராகி உழைத்த உண்மைத் தமிழ்த்தாய்த் தொண்டினைச் சங்கத்தார் உளமகிழ்ந்து கொண்டாடி அவர்பாங்கில் என்றும் மறவா நன்றியினைச் செலுத்துங் கடப்பாடு பூண்டிருக்கின்றனர். இக்கிளைச்சங்க நடபடிக்கைகளின் விபரங்களை அக்காரியதரிசியார் எழுதிய தனி அறிக்கை (அநுபந்தம் ௩) யிற்காண்க.

வருவாய்.

சங்கத்தின்வருவாய் கடந்த ஆண்டுகளிலிருந்தபடியே, அங்கத்தினர் சந்தாவில் வசூலாகும் சிறிய தொகையும், சிற்சில வகையில்வரும் நன்கொடையுமேயாகும். தமிழ்மக்கள் தம் வீடுகளில் நடைபெறும் சுபசோபனுதிச் சடங்குகளில், தம் தாய்மொழி யபிவிருத்தியைக் குறித்து, இயன்றவளவு நன்கொடை புரிந்துவரும் புண்ணியத்தின் கண்ணியத்தைப் பற்



றிச் சென்ற ஆண்டு அறிக்கைகளிற் குறிப்பித்திருக்கின்றோம். அத்தகைய உத்தம நெறியினைச் சித்தத்திற்கொண்டு அடியிற் கண்டபடி தமிழபிமானச் சீலர்கள் இவ்வருடத்தே சங்கத்திற்கு நன்கொடை புரிந்திருக்கின்றனர்:—

௧. சீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள், M. R. A. S., ஆண்டிப்பட்டி ஜமீன்தார், சகோதரியார் திருமணம்—ரூ. 50.

௨. „ R. திருஞானம் பிள்ளை அவர்கள், தனுக்கோடி, திருமணம்—ரூ. 10 பெறுமான புத்தகங்கள்.

௩. „ T. M. இராம்தாஸ் ராவ் மாடிக் அவர்கள், தஞ்சை, திருமணம்-ரூ. 3 பெறுமான புத்தகமும் பணமும்.

௪. „ கு. பேச்சுமுத்துப் பிள்ளை அவர்கள், சுங்கந்திடல், கிரகப்பிரவேசம்—ரூ. 2 பெறுமான புத்தகம்.

௫. „ ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், கரந்தை, கிரகப்பிரவேசம்-ரூ. 1-12-0 பெறுமான புத்தகம்.

௬. „ வீ. சுப்பராய பிள்ளை அவர்கள், கரந்தை, சந்ததிப்பேறு—ரூ. 8 பெறுமான புத்தகங்கள்.

௭. „ R. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள், குளித்தலை, மகப்பேறு—ரூ. 1 பெறுமான புத்தகம்.

௮. „ வீ. நாராயணசாமி பிள்ளை அவர்கள், பட்டுக்கோட்டை, காதணிமங்கலம்—ரூ. 10 பெறுமான புத்தகங்கள்.

௯. „ த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L., கரந்தை, மனைவியாரை நினைவுகூர—ரூ. 5 பெறுமான புத்தகங்கள்.

௰. „ N. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், திரிசிரபுரம், தந்தையார், சகோதரர் திதி—ரூ. 3-12-0.

௰௧. ஸ்ரீமான் S. A. சாம்பசிவம் பிள்ளை அவர்கள், ஜயபுரம், தந்தையார் திதி—ரூ. 1 பெறுமான புத்தகம்.

௰௨. ,, அ. கணபதி பிள்ளை அவர்கள், திரிசிரபுரம், அன்னையார் திதி—ரூ. 1.

௰௩. ,, G. வன்மீகநாத பிள்ளை அவர்கள், திரிசிரபுரம், தந்தையார் திதி—ரூ. 0-2-0.

இவற்றையன்றி, ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார் அவர்கள், நமது சங்கத்தின் ஆண்டுத்திருவிழாவுக்கு வழக்கமாக உதவிவரும் நூறு ரூபாயுடன், தமிழுடையவும், தமிழ்மக்களுடையவும் அபிவிருத்திக்காகும் வழிகளில் உபயோகிக்கும் பொருட்டு இருநூறு ரூபாயும் உதவியிருக்கிறார்கள். இவர்களைப் பின்பற்றிய மற்றைத் தமிழ்மக்களும் தங்கள் தங்கள் தாய்மொழி யபிமானத்தை வெளியிடக்கூடும் சமயங்களில் தவறாது வெளியிடுவார்களென எதிர்நோக்குகின்றோம்.

நீர்வளம், நிலவளம், குடிவளங்களி லொப்புயர் வில்லாது சிறப்பித்துக் கூறப்பட்டுத் தொன்று தொட்டு நற்காரியங்களுக்குப் புரிந்துவரும் கொடைத்திறத்தில் முதன்மை பெற்றிருக்கும் நம் சோழவளநாட்டில் பற்பல ஊர்களுக்கும் சென்று, ஆங்காங்குள்ள குடிமக்கட்கு நம் தாய்மொழியின் அருமையினையும், அதனை ஆதரிக்கவேண்டும் ஆவசியத்தினையும் எடுத்துக் கூறி, ஆங்காங்கு அங்கத்தினர்களையும், அவரவர் மனமுவந்தீயும் நெல்முதலிய எத்திறத்த பொருள் வகைகளையும் சேகரித்து வருகிறதென்று உத்தேசித்தபடி, குளமங்கலம், கூடலூர், குருங்களூர், ஆலத்தூர், சந்தலை, மேலைக்கற்கண்டார்கோட்டை ஆகிய ஊர்களுக்குப்போய் பற்பலவிதமான உதவிகளைப்பெற்றிருக்கின்றோம். அங்கத்தினர்களின் மற்றை வேலை மிகுதியாலும், எதிர்பாராத சில அசௌகரியங்களாலும் இவ்வருடத்தில் இன்னும் அதிக ஊர்களுக்குப்போகவில்லையாயினும், வரும் வருடத்தில் இவ்வழியே அதிக முயற்சிசெய்ய உத்தேசித்திருக்கிறோம். மேற்கூறிய ஊர்களுக்கு நாங்கள் போயிருந்த காலங்களில் அவ்வூர்வாசிகள் எங்களை இன்முகத்தோடு வரவேற்று, பற்பலவிதத்தில் உபசரித்து உதவியனுப்பிய பெருந்தன்மை



யினைக்குறித்து அவர்கட்கு எங்கள் நன்றியறிவினைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இங்ஙனமே மற்றை ஊர்களிலுள்ள தமிழ்மக்களும் தமது தொன்றுதொட்டபுகழினைநாட்டிச் சங்கத்தை ஆதரிப்பார்களெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இடம்.

நமது சங்கம் தனது ஆதரிப்பாளருள் ஒருவராகிய ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்கள் அகத்தையே தனதகமாகக்கொண்டு அதனை விட்டகலாது பற்றிக்கொண்டமையின், அவர்கள் இதற்கு ஓர் தனியகம் அமைத்தருளவிரும்பி வேண்டுவனபுரிய உத்திரவிட்டிருக்கிறார்கள். எனினும், தக்க இடவசதி இன்னும் கிட்டவில்லையாதலின் வழக்கம்போலவே நமது சங்கத்திற்கு இன்னும் இடக்குறை நீங்கிற்றில்லை எனவேண்டிற்று. ஆயினும், நமது சங்கத்தலைவரவர்கள் முயற்சியின் மேல் இவ்வாண்டினில், தர்மாபுரம் டிப்டிகலெக்டர் கனம் வேங்கடசாமி நாயுடு, B. A., அவர்கள் முன்வந்து, இவ்வூர்க் கடைத்தெருவிலுள்ள, காலஞ்சென்ற ஸ்ரீ வாசுதேவ நாய்க்கரவர்களுக்குச் சொந்தமாகிய, சத்திரத்தை சங்கத்தின் உபயோகத்திற்காக ஆறு வருடங்களுக்கு வாடகையன்னியில் அனுபவித்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வழக்கம்போலவே, பெருங்கூட்டங்கள் முதலிய விசேடங்களை நடத்திக்கொள்ள ஸ்ரீ கந்தப்பச் செட்டியார் சத்திரத்தை அதற்குரியார் தந்துதவி வருகிறார்கள். சங்கத்திற்கு இடவசதிக்குறையினை நீக்கிவைக்கமுன்வந்த கனம் வேங்கடசாமி நாயுடு, B. A., அவர்களுக்கும், கனம் கோவிந்தராஜலு நாயுடு அவர்களுக்கும், கனம் சுப்பராயலு நாயுடு அவர்களுக்கும், சங்கத்தார் மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இரங்கல்.

நம் சங்கத்தின் முன்னேற்றத்திற்கே தமது உழைப்பிலும், ஓய்விலும், இன்னும் உறக்கத்திலுங்கூடக் கண்ணுங் கருத்துமாகவிருக்கும் நம் சங்கத்தலைவரவர்கள் தம் அரும்பெறற் பத்தினியாரை யிழக்கநேர்ந்தமைக்குச் சங்கத்தார் மிகவும் விசனிக்கிறார்கள்.

நம் சங்கம் தொடங்கிய காலமுதல் சங்கத்தின் அபி
விருத்திக்காகும் முறைகளை அவ்வப்போது போதித்தும், சங்
கத்தார் வேண்டுங்காலங்களிலெல்லாம் சங்கத்திற்கு வந்திருந்து
பிரசங்கங்கள் புரிந்தும் சங்கத்தை அபிமானித்து வந்தவர்
களான, தஞ்சை, பரி. பேதுரு உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப்
பண்டிதர் ஸ்ரீ வையை. R. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் காலஞ்
சென்றதுபற்றிச் சங்கத்தார் மிகுந்த வியாகூலமடைந்திருக்
கின்றனர். வித்துவசிரோமணியும், குணநிதியுமாகிய ஐயரவர்
கள் குடும்பத்தார்க்குச் சங்கத்தார் தங்கள் நன்றியறிதலினை
யும், அநுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

நம் அருந்தமிழ்த்தாயிடத்து அழுத்தமான அபிமானம்
பூண்டு, தமிழினது ஏற்றத்தையும், பெருமையினையும் உள்ள
வாறேயுணர்ந்து பசுமரத்தாணியென அறைந்து விளக்கிவந்த
ஸ்ரீ மாகறல் கார்த்திகேய முதலியார் அவர்கள் காலஞ்சென்றது
பற்றி இச்சங்கததாரேயன்றி இத்தமிழுலகம் முழுதுமே மனம்
வருந்துவதாகும்.

வாழ்த்து.

முன்னர்க் குறித்தபடி பலவாறு நன்கொடையாலும்,
தூண்டுதலாலும் சங்கத்தை முன்னேறச்செய்யும் வணிகர்சிகா
மணியும், சங்கத்தின் ஆதரிப்பாளருமான சீமான் பெத்தாச்சி
செட்டியார் அவர்கள் எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் எல்
லா நலனும் எய்தப்பெற்று நீடூழிவாழ்வார்களாக. அங்ஙனமே
நமது சங்க ஆதரிப்பாளரும், தமதுகொடைத்திறம், நடைத்
திறம், புலமைத்திறங்களால் தமிழகமுழுதும் தம்புகழ் பரப்பிய
வருமாகிய அரித்துவாரமங்கலம் சீமான் வா. கோபாலசாமி
இரகுநாத இராசாளியார் அவர்களும் கார்வண்ணங் கொடைப்
பெருமான்கருணையால் எல்லாப்பேறுகளும் எய்தி நீடுவாழ்வார்
களாக. இன்னும் சங்க விசேடகாலங்களிலும் மற்றமுக்கிய
மான சமயங்களிலும் தமது மாளிகையையும், வாகனாதிகளையும்
வேண்டியபோது வேண்டியாங்குதவி வரும் பிரபு சிகாமணியா
கிய பூண்டி ராவ்பகதூர் வீ. அப்பாசாமி வாண்டையார் அவர்
கட்கு எங்கள் நன்றியறிதலைச் செலுத்தி அவர்கள் நீடிய சுகவாழ்



விற்குப் பிரார்த்திக்கிறோம். சங்கத்தின் இடக்குறையினை விரித்
திடக் குறைபாடுண்டாக்கிய கனம் வேங்கடசாமி நாயுடு அவர்
களை எங்கள் உளத்திற்பிணித்து, அவர் பெருமையினை உலகிற்
கறிவித்து, எல்லாம் வல்லான் முன்னிலையில் நிறுத்தி அவர்க்கு
எல்லாமேம்பாட்டினையும் உய்க்கவெனப் பிரார்த்திப்பதன்றி
வேறு என்செய்ய வல்லோம். மற்றும் வழக்கம்போலவே
விசேட காலங்களுக்குத் தமது சத்திரத்தைத் தட்டின்றியுதவி
வரும் ஸ்ரீ கந்தப்பச் செட்டியார் குடும்பத்தார்க்கும், திருச்சிக்
கிளைக் காரியதரிசியார் தமது அறிக்கையிற் குறிப்பித்திருக்கிற
படி, தமிழ மாணவர் விடுதி சம்பந்தமாகப் பலவகையிலும்
பேருதவி புரிந்து வந்த பெருந்தகையாளர்களுக்கும்; முன்னரே
குறித்தபடி கனவிலும், நனவிலும் சங்கமேம்பாட்டையும்,
தமிழினதுயர்வையும், தமிழரது அபிவிருத்தியையுமே கருத்திற்
கொண்டு எம்மொடுகலந்து உறவு பூண்டு உழைத்துவரும் எங்க
ளருமைத்தலைவர் அவர்களுக்கும், அங்கத்தினர் கனம் M. S.
கலியாணசுந்தரமையர் அவர்கள், கனம் I. குமரசாமி பிள்ளை
அவர்கள், B. A., கனம் க. சண்முகம் பிள்ளை அவர்கள், B. A.,
கனம் த. பீ. சோமநாத ராவ் அவர்கள், கனம் T. N. குருமூர்த்தி
பிள்ளை அவர்கள், கனம் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்;
கனம் சிவ. சோலைமுத்துப்பிள்ளை அவர்கள், கனம் இராமசாமி
வன்னியர் அவர்கள், முதலிய இடையறுச்சங்காபிமான சிலர்
களுக்கும் எங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளு
கிறோம்.

நமது சங்கமும், இது வளர்க்கும் நம்மருமைத் தமிழும்,
இவற்றையாதரித்துவரும் தம்மருங்கடனுணர்ந்த அங்கத்தின
ரும், மற்றத் தமிழ்ப் பெருமக்களும், நம்மையப்புரந்தருளும் ஆங்
கில இராசராசப் பெருந்தகையும், எவ்வகைச் சிருஞ் சிறப்பு
மெய்தி, என்றென்றும் நிலவிவாழ்கவெனப் பெருங்கருணைத்
தடங்கடலாகிய பேரிறைவன் சீர்ப்ரவி, அவர்தம் திருவடிக்
கமலங்களை ஒன்றியமனத்திற் சிந்தித்து வந்திப்போமாக. சுபம்.

R. வேங்கடாசலம்,
காரியதரிசி.

கரந்தைத்தமிழ்ச்சங்கம்,
தஞ்சை,
நள ஹூ ஆனிமீ.

## அநுபந்தம் க.

---

### கரந்தைத்தமிழ்ச்சங்கம்,

### தஞ்சை.

---

#### ஆதரிப்பாளர்.

ஸ்ரீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியார் அவர்கள், F. T. S., O. S. E.

ஸ்ரீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள், M. R. A. S., ஆண்டிப்பட்டி ஜமீன்தார்.

---

#### சங்கத்தலைவர்.

ஸ்ரீமான் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L.

---

#### காரியதரிசி.

ஸ்ரீமான் R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்.

---

#### பொருளாளர்.

ஸ்ரீமான் ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்.

#### கணக்குப் பரிசோதகர்.

ஸ்ரீமான் பா. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள்.

---



#### நிருவாகசபையார்.

க ஸ்ரீமான் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L.
உ ,, R. வேங்கடாசலம் பிள்ளை ,,
ங ,, ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை ,,
ச ,, ஐ. குமரசாமி பிள்ளை ,, B. A.
ரு ,, சி. தக்ஷிணாமூர்த்தி பிள்ளை ,,
சு ,, த. பீ. சோமநாதராவ் ,,
எ ,, நா. சீதாராம பிள்ளை ,,

---

#### அங்கத்தினர்.

க† ஸ்ரீமான் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L., வக்கீல், கரந்தை.
உ† ,, R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள், மிராசுதார், மோகனூர்.
ங†* ,, அ. கணபதி பிள்ளை ,, உத்தியோகம், திரிசிரபுரம்.
ச† ,, வே. இராதாகிருஷ்ண பிள்ளை ,, B. A., உத்தியோகம், தனுக்கோடி.
ரு† ,, சி. தக்ஷிணாமூர்த்தி பிள்ளை ,, ஷை கரந்தை.
சு† ,, R. கோவிந்தசாமி பிள்ளை ,, ஷை திருவாரூர்.
எ† ,, R. கிருஷ்ணசாமி பிள்ளை ,, ஷை குளித்தலை.
அ* ,, T. N. குருமூர்த்தி பிள்ளை ,, வியாபாரம், திரிசிரபுரம்.
கூ† ,, பா. கலியாணசுந்தரம் பிள்ளை ,, உத்தியோகம், கரந்தை.
ய† ,, V. கோவிந்தசாமி நாயுடு ,, ஷை ஷை
கக† ,, ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை ,, வியாபாரம், ஷை
கஉ† ,, L. சொக்கலிங்கம் பிள்ளை ,, மாணவர், ஷை
கங† ,, பொ. சுப்பிரமணிய பிள்ளை ,, உத்தியோகம், ஷை
கச†* ,, கோ. கோபால்கிருஷ்ண பிள்ளை ,, ஷை திரிசிரபுரம்.
கரு†* ,, நா. துரைசாமி பிள்ளை ,, ஷை ஷை
கசு ,, பக்கீர்மகம்மது சாஹிப் ,, மிராசுதார், வல்லம்.
கஎ‡* ,, E. R. நடேச பிள்ளை ,, உத்தியோகம், திரிசிரபுரம்.
கஅ†* ,, P. கோவிந்தராஜன் ,, உபாத்தியாயர், ஷை
ககூ† ,, மு. பாலகிருஷ்ண பிள்ளை ,, வியாபாரம், கரந்தை.
உய† ,, வீ. சு. சிதம்பரம் பிள்ளை ,, ஷை ஷை

| | | | | |
|---|---|---|---|---|
| ௨௧ | ஸ்ரீமான் | சி. சிவராமகிருஷ்ண பிள்ளை | அவர்கள், | வைத்தியர், கரந்தை. |
| ௨௨† | ,, | ஐ. குமரசாமி பிள்ளை | ,, | B. A., வக்கீல், ஷை |
| ௨௩* | ,, | தி. முனிசாமி முதலியார் | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| ௨௪ | ,, | அ. சுப்பையா பிள்ளை | ,, | வியாபாரம், அறந்தாங்கி. |
| ௨௫† | ,, | ச. சண்முகம் பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| ௨௬* | ,, | அ. பாலசுப்பிரமணிய பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| ௨௭* | ,, | தி. பொ. இராமலிங்கம் பிள்ளை | ,, | ஷை ஷை |
| ௨௮ | ,, | ம. தா. மதார் சாஹீப் | ,, | வியாபாரம், வல்லம். |
| ௨௯ | ,, | ஆ. மாணிக்கஞ் செட்டியார் | ,, | ஷை ஷை |
| ௩௰ | ,, | வை. அரங்கசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், தச்சன்குறிச்சி. |
| ௩௧† | ,, | அ. திருவேங்கடஞ் செட்டியார் | ,, | வியாபாரம், கரந்தை. |
| ௩௨ | ,, | த. அ. நாராயணசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், மதுரை. |
| ௩௩* | ,, | N. சுப்பிரமணிய பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ௩௪* | ,, | T. A. சம்பந்தம் பிள்ளை | ,, | ஷை ஷை |
| ௩௫ | ,, | E. R. பொன்னுச்சாமி பிள்ளை | ,, | மிராசுதார், செங்கமேடு. |
| ௩௬* | ,, | மு. அருணசலம் பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| ௩௭ | ,, | ச. அ. சாம்பசிவம் பிள்ளை | ,, | ஷை ஜயபுரம். |
| ௩௮ | ,, | த. பீ. சோமநாத ராவ் | ,, | வியாபாரம், தஞ்சை. |
| ௩௯ | ,, | D. கந்தசாமி பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| ௪௰ | ,, | J. நடேச பிள்ளை | ,, | ஷை தஞ்சை. |
| ௪௧* | ,, | அ. சதாசிவம் பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| ௪௨ | ,, | ச. சந்திரசேகரம் பிள்ளை | ,, | ஷை கோவூர். |
| ௪௩ | ,, | D. இரத்தினம் பிள்ளை | ,, | ஷை குளித்தலை. |
| ௪௪ | ,, | T. M. இராம்தாஸ் ராவ் மாடிக் | ,, | ஷை தஞ்சை. |
| ௪௫† | ,, | V. பிச்சைமுத்து முதலியார் | ,, | மிராசுதார், வரகுகோட்டை. |
| ௪௬† | ,, | நா. சீதாராம பிள்ளை | ,, | உத்தியோகம், கரந்தை. |
| ௪௭† | ,, | அ. ஜகராயப் பிள்ளை | ,, | B, A., B. L., வக்கீல், தஞ்சை. |
| ௪௮ | ,, | அ. அனந்தவிஜய முதலியார் | ,, | வியாபாரம், கரந்தை. |
| ௪௯† | ,, | ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளை | ,, | B. A., வக்கீல், கோவில்பட்டி. |
| ௫௰ | ,, | R. திருஞானம் பிள்ளை | ,, | உத்தியோகம், தனுக்கோடி. |
| ௫௧ | ,, | கோ. சுப்பிரமணிய பிள்ளை | ,, | வியாபாரம், மன்னார்குடி. |



| | | | | |
|---|---|---|---|---|
| ௫௨ | ஸ்ரீமான் | சொ. முத்தையா பிள்ளை | அவர்கள், | ஒப்பந்தவேலை, தனுக்கோடி. |
| ௫௩ | ,, | க. சாமிநாத பிள்ளை | ,, | உபாத்தியாயர், ஆலத்தூர். |
| ௫௪ | ,, | வே. கந்தசாமிச்சேர்வைகாரர் | ,, | மிராசுதார், ஆலங்குடி. |
| ௫௫ | ,, | மு. அண்ணாசாமி நாயுடு | ,, | உத்தியோகம், தனுக்கோடி. |
| ௫௬ | ,, | கு. பேச்சுமுத்துப் பிள்ளை | ,, | வியாபாரம், சுங்கந்திடல். |
| ௫௭ | ,, | மு. இரத்தினசபாபதி பிள்ளை | ,, | உத்தியோகம், மாதவ போரிடா. |
| ௫௮ | ,, | அ. பாலசுப்பிரமணிய பிள்ளை | ,, | உபாத்தியாயர், கும்பகோணம். |
| ௫௯† | ,, | வீ. நாராயணசாமி பிள்ளை | ,, | மிராசுதார், பட்டுக்கோட்டை. |
| ௬௰† | ,, | த. கி. அருணசலம் பிள்ளை | ,, | உத்தியோகம், தஞ்சை. |
| ௬௧† | ,, | V. பெரியசாமி பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| ௬௨ | ,, | ம. சாமிக்குச்சிராயர் | ,, | மிராசுதார், குருங்களூர். |
| ௬௩ | ,, | பொ. சொக்கலிங்கம் பிள்ளை | ,, | ஷை கூடலூர். |
| ௬௪ | ,, | சி. சாமியையாத் தேவர் | ,, | ஷை அருந்தவபுரம். |
| ௬௫ | ,, | S. கோவிந்தசாமிச்செட்டியார் | ,, | உத்தியோகம், பள்ளியக்கிரகாரம். |
| ௬௬†* | ,, | க. மதுரைநாயகம் பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ௬௭†* | ,, | ச. கோபால பிள்ளை | ,, | ஷை ஷை |
| ௬௮† | ,, | ம. உலகநாத பிள்ளை | ,, | வியாபாரம், தஞ்சை. |
| ௬௯† | ,, | M. S. கலியாணசுந்தரயையர் | ,, | வக்கீல், கரந்தை. |
| ௭௰ | ,, | நா. கோதண்டபாணிப்பிள்ளை | ,, | உத்தியோகம், தனுக்கோடி. |
| ௭௧ | ,, | அ. சாமிராவ் | ,, | ஷை தஞ்சை. |
| ௭௨†* | ,, | அ. மதுரைநாயகம் பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ௭௩ | ,, | க. சாமிநாத பிள்ளை | ,, | ஷை மதுரை. |
| ௭௪ | ,, | மு. நாராயணசாமி நாயுடு | ,, | ஷை வல்லம். |
| ௭௫ | ,, | அ. சுப்பராயலு நாயுடு | ,, | வியாபாரம் ஷை |
| ௭௬ | ,, | T. B. தாஸ் ராவ் | ,, | உத்தியோகம், ஒரத்தநாடு. |
| ௭௭† | ,, | S. இராஜகோபால பிள்ளை | ,, | ஷை தஞ்சை. |
| ௭௮† | ,, | T. இராஜாராம் ராவ் | ,, | ஷை ஷை |
| ௭௯ | ,, | க. முத்தையா செட்டியார் | ,, | வியாபாரம், சிதம்பரம். |
| ௮௰† | ,, | க. சண்முகம் பிள்ளை | ,, | B. A., B. L., வக்கீல், தஞ்சை. |
| ௮௧† | ,, | T. V. சையத்மியான் சாஹீப் | ,, | உபாத்தியாயர், தஞ்சை. |
| ௮௨ | ,, | அல்லிமுத்துப் பிள்ளை | ,, | உத்தியோகம் ஷை |
| ௮௩† | ,, | மா. வே. கோபாலகிருஷ்ணையர் | ,, | வியாபாரம், கரந்தை. |
| ௮௪ | ,, | T. R. விசுவநாத பிள்ளை | ,, | உத்தியோகம், தொழுதூர். |
| ௮௫† | ,, | ஆ. சி. கங்காதர முதலியார் | ,, | ஷை தனுக்கோடி. |

| | | | |
|---|---|---|---|
| ௮௬† | ஸ்ரீமான் | ம. நடராஜ பிள்ளை | அவர்கள், B. A., B. L., வக்கீல், தஞ்சை. |
| ௮௭ | ,, | ச. சி. பஞ்சநதம் பிள்ளை | ,, வியாபாரம், கும்பகோணம். |
| ௮௮ | ,, | தி. சுப்புப் பிள்ளை | ,, மாணவர், சென்னை. |
| ௮௯ | ,, | வெ. இராமச்சந்திர ராவ் | ,, உத்தியோகம், தனுக்கோடி. |
| ௯௰ | ,, | து. சுப்புசாமி நாட்டரையர் | ,, உபாத்தியாயர், ஆச்சாம்பட்டி. |
| ௯௧ | ,, | மு. கோவிந்தசாமி பிள்ளை | ,, வைத்தியம், வல்லம். |
| ௯௨ | ,, | மு. அரிஹரபுத்திர செட்டியார் | ,, வியாபாரம் ஷை |
| ௯௩†* | ,, | R. பஞ்சநதம் பிள்ளை | ,, உத்தியோகம், திரிசிரபுரம். |
| ௯௪†* | ,, | M. நடேச முதலியார் | ,, ஷை ஷை |
| ௯௫* | ,, | T. R. இராஜரத்தினம் பிள்ளை | ,, B. A., L. T., உபாத்தியாயர் ஷை |
| ௯௬ | ,, | அ. சதாசிவக் கண்டியர் | ,, மிராசுதார், ஆவாரம்பட்டி. |
| ௯௭† | ,, | தி. மூ. நாராயணசாமி பிள்ளை | ,, B. A., மாணவர், திருவணந்தபுரம். |
| ௯௮* | ,, | S. சோமசுந்தரம் பிள்ளை | ,, ஷை திரிசிரபுரம். |
| ௯௯* | ,, | மு. வேங்கடசாமி நாட்டார் | ,, உபாத்தியாயர், ஷை |
| ௱ | ,, | M. முத்தைய நாட்டார் | ,, மிராசுதார், அரசன்குடி. |
| ௱௧* | ,, | R. நடேச முத்திரியர் | ,, மாணவர், திரிசிரபுரம். |
| ௱௨* | ,, | தி. சு. துரைசாமி பிள்ளை | ,, மிராசுதார், ஷை |
| ௱௩ | ,, | த. பொ. கை. அழகிரிசாமி பிள்ளை | ,, B. A., உத்தியோகம், மகரநோம்புச்சாவடி. |
| ௱௪ | ,, | சு. சாமிநாத ராவ் | ,, ஷை தஞ்சை. |
| ௱௫ | ,, | க. பொன்னுச்சாமி பிள்ளை | ,, சங்கீத வித்துவான், தஞ்சை. |
| ௱௬ | ,, | T. V. சதாசிவப் பண்டாரத்தார் | ,, உத்தியோகம், பாவநாசம். |
| ௱௭† | ,, | சா. வேங்கடராம ஐயர் | ,, உபாத்தியாயர், கும்பகோணம். |
| ௱௮ | ,, | சா. சிவராம பிள்ளை | ,, வியாபாரம், தஞ்சை. |
| ௱௯† | ,, | T. S. சுப்பையா பிள்ளை | ,, உத்தியோகம், குடகு. |
| ௱௰ | ,, | T. G. மாணிக்கம் பிள்ளை | ,, ஷை தஞ்சை. |
| ௱௧௧ | ,, | சொ. மதுரையா பிள்ளை | ,, மிராசுதார், சந்தலை. |
| ௱௧௨ | ,, | அ. பொன்னுச்சாமி பிள்ளை | ,, ஷை கரந்தை. |
| ௱௧௩ | ,, | வா. அப்புசாமி நாயுடு | ,, ஷை விளுடையபுரம். |
| ௱௧௪ | ,, | ச. வீராசாமி நாயுடு | ,, உத்தியோகம், நாகைப்பட்டிணம். |
| ௱௧௫ | ,, | T. S. சீனிவாச ராஜா | ,, ஷை ஷை |



| | | | |
|---|---|---|---|
| ௱௧௬ | ஸ்ரீமான் | S. மகாலிங்கம் பிள்ளை | அவர்கள், உத்தியோகம், மகரநோம்புச்சாவடி. |
| ௱௧௭ | ,, | T. S. கணபதி பிள்ளை | ,, ஷை ஷை |
| ௱௧௮ | ,, | சா. மாணிக்கம் பிள்ளை | ,, ஷை தஞ்சை. |
| ௱௧௯* | ,, | R. அருணாசலம் பிள்ளை | ,, ஷை திரிசிரபுரம். |
| ௱௨௰* | ,, | K. கிருஷ்ணமாச்சாரியார் | ,, ஷை ஷை |
| ௱௨௧ | ,, | T. G. வீரபத்திர பிள்ளை | ,, ஷை குளித்தலை. |
| ௱௨௨ | ,, | நா. சண்முக முதலியார் | ,, மிராசுதார், பனையூர். |
| ௱௨௩ | ,, | அ. சாமிநாத முதலியார் | ,, ஷை ஷை |
| ௱௨௪ | ,, | ஆ. சா. பழனியாண்டிப்பிள்ளை | ,, ஷை ஆற்காடு. |
| ௱௨௫ | ,, | அ. கிருஷ்ணசாமித் தேவர் | ,, ஷை வாட்டார். |
| ௱௨௬* | ,, | V. சுப்பராய முதலியார் | ,, உத்தியோகம், திரிசிரபுரம். |
| ௱௨௭†* | ,, | தி. கூரத்தாழ்வார் முதலியார் | ,, ஷை ஷை |
| ௱௨௮ | ,, | அ. கந்தசாமி பிள்ளை | ,, உபாத்தியாயர், கோயமுத்தூர். |
| ௱௨௯ | ,, | நடேச செட்டியார் | ,, மிராசுதார், நீடாமங்கலம். |
| ௱௩௰†* | ,, | க. கிருஷ்ண பிள்ளை | ,, மாணவர், திரிசிரபுரம். |
| ௱௩௧* | ,, | S. செல்லப்ப முதலியார் | ,, உத்தியோகம், ஷை |
| ௱௩௨ | ,, | C. சச்சிதானந்தம் பிள்ளை | ,, ஷை தஞ்சை. |
| ௱௩௩ | ,, | அ. சதாசிவம் பிள்ளை | ,, ஷை கரந்தை. |
| ௱௩௪ | ,, | G. சுப்பராய பிள்ளை | ,, ஷை ஷை |
| ௱௩௫ | ,, | இ. மகம்மதுகன்னி சாஹீப் | ,, வியாபாரம், வல்லம். |
| ௱௩௬ | ,, | வே. முத்துசாமிக் கண்டியர் | ,, மிராசுதார், சுங்கந்திடல். |
| ௱௩௭† | ,, | அ. முருகைய செட்டியார் | ,, ஷை நீடாமங்கலம். |
| ௱௩௮ | ,, | க. தம்புசாமிச் செட்டியார் | ,, ஷை ஷை |
| ௱௩௯† | ,, | S. சோமசுந்தர முதலியார் | ,, உத்தியோகம், தஞ்சை. |
| ௱௪௰† | ,, | வே. இராமச்சந்திர பிள்ளை | ,, ஷை மாயவரம். |
| ௱௪௧ | ,, | நா. பொன்னுச்சாமி பிள்ளை | ,, வியாபாரம், தஞ்சை. |
| ௱௪௨ | ,, | D. K. சுப்பையா நாயுடு | ,, ஷை ஷை |
| ௱௪௩ | ,, | த. சி. துரைசாமி பிள்ளை | ,, உத்தியோகம். ஷை |
| ௱௪௪ | ,, | ஸ்ரீ. அரங்கசாமி வன்னியர் | ,, மிராசுதார், கூடலூர். |
| ௱௪௫ | ,, | சா. சச்சிதானந்தத் தஞ்சிராயர் | ,, ஷை ஷை |
| ௱௪௬ | ,, | து. முத்துக்குமாரசாமித் தஞ்சிராயர் | ,, ஷை ஷை |
| ௱௪௭ | ,, | சு. காமாட்சியா பிள்ளை | ,, ஷை குளமங்கலம். |
| ௱௪௮ | ,, | வ. சிவராம பிள்ளை | ,, ஷை ஆலத்தூர். |
| ௱௪௯ | ,, | சா. சுப்பராய பிள்ளை | ,, வியாபாரம், ஷை |
| ௱௫௰ | ,, | A. கோவிந்தசாமி பிள்ளை | ,, மிராசுதார், ஷை |
| ௱௫௧ | ,, | சி. வைத்தியலிங்கம் பிள்ளை | ,, ஷை ஷை |
| ௱௫௨ | ,, | V. சிவசாமி பிள்ளை | ,, ஷை ஷை |
| ௱௫௩ | ,, | சா. குப்புசாமி முதலியார் | ,, உத்தியோகம், மணக்கால். |
| ௱௫௪ | ,, | P. சுப்பையா முதலியார் | ,, மிராசுதார், ஆலத்தூர். |
| ௱௫௫†* | ,, | P. கந்தசாமி முதலியார் | ,, உத்தியோகம், திரிசிரபுரம். |

† புத்தகசாலைக்கும் அங்கத்தினர். * திருச்சிக்கிளை அங்கத்தினர்.

## அநுபந்தம் ௨.

### கரந்தைத்தமிழ்ச்சங்கம், தஞ்சை.

### இராக்கத—நள வருடத்தில் புத்தகங்கள் உதவியவர்களின் விவரம்.

| | | | பிரதிகள். |
|---|---|---|---|
| ௧. | கரந்தைத் தமிழ்ச்சங்கம் (விலைக்கு வாங்கியன.) | | 8 |
| ௨. | கனம் வீ. சுப்பராய பிள்ளை அவர்கள், | கரந்தை | 33 |
| ௩. | ,, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A, B. L., | கரந்தை | 10 |
| ௪. | ,, M. S. கலியாணசுந்தரமையர் அவர்கள், | கரந்தை | 7 |
| ௫. | ,, T. R. கிருஷ்ணசாமி பிள்ளை ,, | குளித்தலை | 5 |
| ௬. | ,, வேங்கடராம ராஜா ,, | தஞ்சை | 5 |
| ௭. | ,, பொ. சுப்பிரமணிய பிள்ளை ,, | கரந்தை | 4 |
| ௮. | ,, வீ. நாராயணசாமி பிள்ளை ,, | பட்டுக்கோட்டை | 3 |
| ௯. | ,, T. கனகசுந்தரம் பிள்ளை ,, | B. A., சென்னை | 3 |
| ௰. | ,, P. கந்தசாமி முதலியார் ,, | திரிசிரபுரம் | 2 |
| ௰௧ | ,, K நடேச ஐயர் ,, | தஞ்சை | 2 |
| ௰௨. | ,, வே. தில்லைநாயகம் பிள்ளை ,, | சிதம்பரம் | 2 |
| ௰௩. | ,, R. திருஞானம் பிள்ளை ,, | தனுக்கோடி | 2 |
| ௰௪. | ,, A. K. கோபாலகிருஷ்ண ஐயர் ,, | — | 1 |
| ௰௫ | ,, கு. பேச்சுமுத்துப் பிள்ளை ,, | சுங்கந்திடல் | 1 |
| ௰௬. | ,, ஆ. சபாபதி பிள்ளை ,, | கரந்தை | 1 |
| ௰௭. | ,, S. சந்திரசேகரம் பிள்ளை ,, | கோவூர் | 1 |
| ௰௮. | ,, T. B. சோமநாத ராவ் ,, | தஞ்சை | 1 |
| ௰௯. | ,, சிவ. சோலைமுத்துப் பிள்ளை ,, | ,, | 1 |
| ௨௰. | ,, S. A. சாம்பசிவம் பிள்ளை ,, | ஜயபுரம் | 1 |
| ௨௧. | ,, கலியப்பெருமாள் பிள்ளை ,, | நீடாமங்கலம் | 1 |
| ௨௨. | ,, இராம்தாஸ் ராவ் மாடிக் ,, | தஞ்சை | 1 |
| ௨௩. | ,, N. சுப்பிரமணிய பிள்ளை ,, | திரிசிரபுரம் | 1 |
| ௨௪. | ,, V. இராதாகிருஷ்ண பிள்ளை ,, | B. A., தனுக்கோடி | 1 |
| ௨௫. | ,, இஸ்மால்சா ராவுத்தர் ,, | வல்லம் | 1 |
| ௨௬. | ,, வேலு முதலியார் ,, | — | 1 |



## அநுபந்தம் ௩.

### கரந்தைத்தமிழ்ச்சங்கம், தஞ்சை.

### திரிசிரபுரம் கிளை.

சீர்மலி சிறப்பிற் பேர்மலி இக்கிளை எல்லாம் வல்ல இறைவன் திருவருட் பெருக்கால் தனது மூன்றாவது ஆண்டின் நிறைவைப் பெற்றது.

#### ௧. உறுப்பினர்.

இவ்வாண்டின் தொடக்கத்தில் இதன் உறுப்பினராயிருந்தோர் பத்தொன்பதின்மர்; இவருள் இடையே நீங்கினர் நால்வர் போக நின்றாருடன் இவ்வாண்டில் புதியராய்ச் சேர்ந்தார் பதினைவரும் தொக உறுப்பினர் முப்பதின்மராவர்.

#### ௨. கூட்டங்கள்.

இவ்வாண்டில் எழு கூட்டங்கள் நிகழ்ந்தன. அவற்றில் ஒன்று காரியக் கூட்டம். மற்றைய கூட்டங்களில் பிரசங்கங்களும், கம்ப ராமாயணப் பாடமும் நடந்தன. இவ்வகைக் கூட்டங்கள் மிகுதியாக நிகழப் பெறுமையின், உறுப்பினர் பலரும் தமது நன்மைக்குரிய இவ்வழிகளில் அவாவும் ஊக்கமுமுடையராய்த் தமக்கேற்படும் சாதனங்களைத் தக்கவாறு உபயோகித்துக்கொள்ளுகின்றனரெனச் சொல்லமுடியவில்லை. எனினும், ஒரு சிலரேனும் தமிழ்ப் பயிற்சியிற் பேரவாக் கொண்டு பண்டிதர் கனம் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களிடம் திருக்குறளும், நன்னூலும் பயின்று வருவதானது மகிழ்ச்சி விளைக்கின்றது.

#### ௩. வருவாய்.

இக்கிளையின் வரும்படி கீழ்க் காட்டிய விவரணப்படி ஆகும்:—

| | | |
|---|---|---|
| சங்கவுறுப்பினர் சந்தா | ரூ. | 54–12—0 |
| புத்தகசாலையுறுப்பினர் சந்தா | ரூ. | 6—6—0 |
| நன்கொடை | ரூ. | 8—4—3 |
| ஆக | ரூ. | 69—6—3. |

பண்டிதர் கனம் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்
நமது கிளைச் சங்கத்தினரைப் பயிற்றித் தேற்ற முன்வந்தது
ஒரு சிறிதும் கைம்மாறு கருதாது, தமிழிடத்தும், தமிழ் மக்க
ளிடத்தும் அவர்கள் கொண்டுள்ள அன்பு காரணமாகவே. அங்
ஙனமாயினும், அவர்களது உண்மையன்பிற்குவந்த நமது தாய்ச்
சபையார் தமது நன்றி யறிவிற்கறிகுறியாகப் பண்டிதரவர்
களுக்கு வெள்ளிக்கிண்ணமொன்று சன்மானித்தனர்.

ச. மாணவர் விடுதி.

சென்ற ஆண்டின் அறிக்கையில் மாணவர் விடுதி ஒன்று
ஏற்படவேண்டிய ஆவசியகத்தைப்பற்றிக்கூறி அங்ஙனமே ஏற்
படவுங்கூடுமெனக் குறிப்பித்தபடி 1915௵ ஜூலைமீ 5உ
'பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்த' உதியன்சேர
லாதனின் ஞாபகமாக 'உதியன் விடுதி' என்றபெயருடன் திரிசிர
புரம் கோட்டையில் ஓர் தமிழ மாணவர் விடுதி தோன்றுவதா
யிற்று. அங்ஙனம் தோன்றிய அதுதான் சங்கத்தாரின்
இடையறு மெய்ம்முயற்சி முதலியவற்றைப்பெற்றுச் செவ்
விதின் நடைபெற்று வந்ததாயினும், அது நிலைத்து நடைபெறு
வாறு சில பல தடைகள் நேர்ந்தன. அவற்றுள், பொருளில்
லாதது பொதுவகையான ஓர் தடையானாலும், இவ்விடுதி
தோன்றிய பின்னர் பரி. சூசையப்பன் கலாசாலையார் தமது
கலாசாலை மாணவர்கள்பாற் பரிவுகூர்ந்து ஓர் பிரத்தியேகமான
விடுதி ஏற்படுத்தி அவர்கள் அங்குத்தானே உண்ணவேண்டு
மென வற்புறுத்தியது முதலான சில காரணங்களால் உதியன்
விடுதியில் உண்டுவந்த மாணவர்களின் தொகை நாளடைவிற்
சுருங்கியது ஓர் முக்கியமான தடையாகும். இன்ன காரணங்
களால், தமிழ மாணவர்களுக்குப்பெரிதும் சௌகரியம் செய்ய
வேண்டுமென்னுங் கருத்துடைய இச்சங்கத்தார் தாம் கருதிய
வாறு நடத்தமுடியவில்லையென்றாலும், மாணவர்களிற் பெரும்
பான்மையோருக்கு வசதி ஏற்பட்டுவிட்டதால் சங்கத்தார்
இப்பொழுது சிரமத்துடன் நடத்தவேண்டிய அவசியம் இல்லை
யென நினைத்து, 1916௵ ஜனவரிமீ 31உக்குப் பின் நிறுத்தி
வைத்திருக்கின்றனர். தக்காருதவியும், இறைவனருளும் கூடின்,
பின் இது நடைபெறுதலும் கூடும். இவ்விடுதி நடைபெற்ற
காலத்தில் இதன் பொறுப்பாளர் பதவியை வகித்து கனம்



T. N. குருமூர்த்தி பிள்ளை அவர்கள், 'மெய்வருத்தம் பாரார்'
என்னும் பாட்டுக்கிலக்காக உழைத்து வந்தார்கள். இங்ஙனமே
கனம் R. சிவகடாட்சம் பிள்ளை அவர்களும் உழைத்து வந்தார்
கள். இவர்களுழைப்பு, தமிழ்மக்கள் பாலிருந்த அன்பு காரண
மாகவே யன்றி வேறன்று. இவ்விடுதியினால் சங்கத்திற்கேற்
பட்ட பணப்பொறுப்பு ரூ. 150—1—3ல் விடுதியின்பொருட்டு
வாங்கிக் கைவசமிருக்கும் பாத்திரங்கள் வகையில் அடங்கிய
ரூ. 60—1—3 போக உண்மையில் நஷ்டமானது ரூ. 90—0—0
ஆகும். எனினும், இதைவிட மாணவர்களுக்குப் போதிய
சௌகரியம் செய்யப்பெறாதிருந்ததே பெரு நஷ்டமாகக்
கருதப்படுகிறது. இங்ஙனம் விடுதிக்கேற்பட்ட தொகை நஷ்
டத்தை இக்கிளையுறுப்பினர் சிலர் நிவர்த்தித்து விடுவதாக
அன்புடன் வாக்களித்திருக்கின்றனர்.

ரு நன்றிகூறல்.

யாம் தமிழறிவாராய்ச்சிகளிற் சிறக்கவேண்டுமென மிகப்
பரிந்து எமக்குள்ளன்புடன் பாடஞ்சொல்லிவரும் பண்டிதர்
கனம் மு. வேங்கடசாமி நட்டார் அவர்களுக்கும், வழக்கம்போல்
எமக்கு வேண்டிய புத்தகம், பத்திரிகை முதலியவைகளையுதவி
வருக்கிவரும் தாய்ச்சங்கத்தார்க்கும், தலைவரவர்கட்கும் இக்கிளைச்
சங்கத்தினர் மிகுதியும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்
கின்றனர் என்பதை ஈண்டுக்குறிப்பிடுகின்றேன். மற்றும், இச்
சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 'உதியன் விடுதி' யில்
பொறுப்பாளர் பதவியை வகித்து, ஒரு சிறிதும் பயன் கருதா
மலும், பல்லோர்கூறிய பழிமொழிகளைச் சிந்தையிற் கொள்ளா
மலும் உழைத்து வந்தவர்களான கனம் T. N. குருமூர்த்தி
பிள்ளை அவர்களுக்கும், கனம் R. சிவகடாட்சம் பிள்ளை அவர்
களுக்கும், எங்கட்குப் பலவாறு உதவிபுரிந்து வந்த பண்டிதர்
கனம் D. சவரிராய பிள்ளை, M. R. A. S., அவர்களுக்கும், கனம்
T. R. இராஜரத்தினம் பிள்ளை, B. A., L. T., அவர்களுக்கும்,
கனம் N. சுப்பிமணிய பிள்ளை அவர்களுக்கும், இதற்குப்
பொருள் கொடுப்பதாக வாக்களித்துள்ள உண்மையன்பர்
களுக்கும் யாம் நன்றியறியும் கடப்பாடுடையேம். சுபம்.

திரிசிரபுரம், }
௵ ஆனிமீ. }

அ. கணபதி,
கிளைக்காரியதரிசி.

அநுபந்தம் ஃ.

**கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.**

இராக்கத—நள வருடத்தில் வரவு செலவு விவரம்.

| வரவு. | தொகை. ரூ. | அ. | ப. | செலவு. | தொகை. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| சென்ற வருடக்கடைசியில் பாக்கி | 400 | 1 | 1 | அச்சுக்கூலி ... | 15 | 0 | 0 |
| இவ்வருடத்தில் சந்தா— | | | | ஸ்டேஷனரி ... | 0 | 4 | 6 |
| மாதச்சந்தா ரூ. 266—8—0 | | | | தபால், தந்தி ... | 3 | 3 | 6 |
| புத்தகசாலைச் சந்தா ரூ. 27—6—0 | 293 | 14 | 0 | சங்கத்திற்குப் புத்தகம் வாங்கியது ... | 20 | 8 | 0 |
| நன்கொடை ... | 528 | 14 | 6 | நான்காவது வருடத் திருவிழாச் செலவு ... | 292 | 15 | 10 |
| புத்தகம் விற்றுமுதல் ... | 1 | 9 | 0 | புத்தகங்கட்டுக் கூலி ... | 11 | 12 | 0 |
| பரீட்சைப் பிரவேச கட்டணம் ... | 2 | 0 | 0 | கல்விப்பயிற்சிக்கு உபகாரச் சம்பளம் ... | 21 | 0 | 0 |
| சேமப் பொருட்கு வட்டி ... | 9 | 0 | 0 | சங்கத்திற்குப் பீரோ 1 வாங்கியது ... | 35 | 0 | 0 |
| | | | | பாடம் சொல்லுபவர்க்கு வண்டிச்சத்தம், சன்மானம்.. | 25 | 0 | 0 |
| | | | | "உதியன்" மாணவர் விடுதிக்குக் கைம்மாற்றுக்கடன். | 129 | 15 | 6 |
| | | | | பாக்கியிருப்பு.— | | | |
| | | | | சங்கத்தலைவர்வசம் ரூ. 452-5-11 | | | |
| | | | | பொருளாளர் வசம் ரூ. 228-5—4 | 680 | 11 | 3 |
| மொத்தம் ... | 1,235 | 6 | 7 | மொத்தம் ... | 1,235 | 6 | 7 |

R. வேங்கடாசலம், காரியதரிசி.
ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை, பொருளாளர்.

தஞ்சை, கரந்தை.
நள ௵ ஆனி ௴ கஉ.
} பரிசோதனையிற் சரியெனக் காணலாயிற்று.

பா. கல்யாணசுந்தரம்,
கணக்குப்பரிசோதகர்.

# THE KARANTHAI TAMIL SANGAM,
## Tanjore.

*Registered under Act XXI of 1860 of the Governor-General of India in Council.*

**Founded on the 14th May, 1911.**

OBJECTS.

1. To advance and improve the cause and condition of Tamil and Tamilians.

2. To promote friendly and social intercourse among the members.

3. To maintain the Charitable Institutions of the Tamilians.

4. To afford, as far as practicable, facilities for the physical, moral, social and mental improvement of the members.

5. To help the industrial and economic advancement of the Tamilians.

These objects are to be attained by organising lectures and debates, maintaining reading rooms and libraries, holding tuition classes, publishing books, magazines and tracts, carrying on original researches, establishing Industrial and Technical Institutions, Tamil Schools and Colleges, under-taking Translations from other languages and production of original works on Sciences, management of Charitable and Educational Institutions and Trusts entrusted to the Sangam, holding Conferences etc. etc.

All interested in the cause are welcome to become Members.

# தமிழ்.

சங்கநிதி பதுமநிதி
யிரண்டுந் தந்து

தரணியொடு வானாளத்
தருவ ரேனும்

மங்குவார் அவர்செல்வம்
மதிப்போம் அல்லேம்

மாதமிழுக் கேகாந்தர்
அல்ல ராகில்

அங்கமெலாம் குறைந்தழுகு
தொழுநோ யராய்

ஆவுரித்துத் தின்றுழலும்
புலைய ரேனும்

தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர்
அன்ப ராகில்

அவர்கண்டீர் யாம்வணங்குங்
கடவு ளாரே.

---

உ

# ஆருவதாண்டு

அறிக்கைப்பத்திரம்

நள வருடம்.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்

(பதிவுசெய்ப்பெற்றது)

தஞ்சை

விரோதிகிருது ௵ வைகாசி௴ ௯

சிறுவப்பெற்றது.

1917.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

**தாயிற் சிறந்தொரு**

**கோயிலுமில்லை.**

நும்மை வளர்க்கும் அருமைத் தமிழ்த்
தாய் மயங்கித் தியங்குகின்றனள் !

* * *

அன்னை பசித்துவாட அன்னதானம்
பலிக்குமோ ?

* * *

'உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு'

* * *

வள்ளுவர் வாக்குப் பொய்ப்பதேயில்லை !

* * *

இதனைத் தெளிமின் !
தெளிந்து உய்மின் !!

* * *

நுமக்குக் கைகொடுக்கும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

உ

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

(பதிவுசெய்யப்பெற்றது.)

தஞ்சை.

## ஆறாம் ஆண்டின் அறிக்கைப்பத்திரம்.

நள ௵

கனம்பொருந்திய அக்கிராசனாதிபதியவர்களுக்கும், மற்றைக்கனவான்களுக்கும் உரிமை விண்ணப்பம்.

தமிழபிமானப் பெருந்தகையாளர்களே !

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதிற்
றக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே !"

என்று சிறப்பிக்கும் பெருமைவாய்ந்த நமது தெய்வத் தமிழ் மொழியைப் போற்றி வளர்ப்பான் தோன்றிய இக் கரந்தைத் தமிழ்ச்சங்கம் இறைவன் றிருவருளால் ஆறாட்டைப் பிராயம் முற்றியது. ஆதிபகவன் அருளடி அகத்தமைத்து அவர்க்கும் அவரருள் பெற்ற நம்மருமைத் தமிழ் மகளுக்கும் பல்லாண்டு கூறிச் செல்லாண்டறிக்கை விரிப்பேமாக.

இச்சங்க முயற்சிகளைத் தொகுத்துக் கூறுவான் வகுத்துக்கொண்ட சங்கவருடம் இதுகாறும் வைகாசியிற் றொடங்கிச் சித்திரையில் நிறைந்து இவ்விரண்டு வருடப் பெயர்களால் குறிக்கப்பெற்று வந்தது. இனி, இவ்வருடத்தைத் தமிழ் வருடத்திற் கிணங்கச் சித்திரையிற் றொடங்கச் சங்கத்தார் கொண்ட கொள்கையின் படி நள வருடம் வைகாசி மாதம் முதல் பங்குனி மாதம் முடியப் பதினொரு மாத விவரங்களே இங்கு எழுதப்படுகின்றன.

### ஐந்தாவதாண்டின் திருவிழா

நள ௵ ஆவணி௴ ௪, ௫, தேதிகளில் ஸ்ரீமான் கந்தப்பச்செட்டியார் அவர்கள் சத்திரத்தில், இராமநாதபுரத்தரசர் மாட்சிமிக்க பா. இராச ராசேசுவர சேதுபதி அவர்கள் அக்கிராசனத்தில் வெகு சிறப்பாக நடந்

தேறியது. திருவிழா நடந்த இரண்டு நாளும் முன்னைய வருடங்களினும் அதிகமாக அன்பர்கள் கூடிப் பெரியோர்கள் நன்மொழிகளைக் கேட்டு மகிழ்ந்தனர். சில பல தடைகளால் அக்கிராசனர் அவர்கள் குறித்த காலங்களில் சபைக்கு எழுந்தருள வியலாது போயினமையால் பெருஞ்சொல்லாளர்களுக்குப் போதுமான நேரந்தந்து அவர்கள் தம்பேரறிவினால் ஆராய்ந்து கண்ட அரியபெரிய விடயங்களை யெல்லாம் முற்றக்கேட்கும் பாக்கியம் பெருமைக்குப் பெரிதும் விசனிக்கின்றோம். எனினும், இப்பேரறிஞர்கள் தம் வியாசங்களை முறைப்படுத்தி எழுதித்தரின் அவைகள் எமக்கு மட்டுமேயன்றி யாவருக்கும் பிரயோசனமாகும்.

சேதுபதியவர்கள், வாத்தியம் பல முழங்க எதிர்கொண்டழைக்கப் பெற்றுச், சங்கத்தார் நல்வரவு கூறிவாழ்த்தி வேண்டியபடி தலைமை வகித்துக், கடவுள் வாழ்த்தும் தமிழ்த் தெய்வ வணக்கமும் நடந்த பின்புத் தம் அருமையான முகவுரைப் பிரசங்கத்தைச் செய்தார்கள். இது யாவர்க்கும் பிரயோசனமாம்படி அச்சிட்டு அவர்கள் உதவிய பெருமை யாவரானும் பாராட்டப்பெற்றது. பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டு மூவேந்தரும் போற்றிவளர்த்த தமிழ்ப் பயிரானது தற்காலம் போற்றுவாரின்றித் தளர்நிலை யுற்றதைப்பார்த்து வாளாவிருத்தல் தமிழ்மக்களுக்கு அடாது என்றும், சென்னைச் சருவகலா சங்கத்தார் நம்மொழியின் வளர்ச்சி நலந் தேடாது உபேட்சிப்பது சிறப்புடைத் தன்றெனவும், இவ்வாறு ஒரோவழி முறை செய்தலில் முயற்சி தவிரும் அரசாங்கத்தினர்க்கு இடித்திடித்துக் கட்டுரை கூறி அவரைத் தெருட்டுதல் தமிழ்ச்சங்கங்களின் முதற் கடனென்றும், நமது நாட்டு அரசர், சமீன்தார்கள், மிராசுதார்கள் முதலிய தமிழ்ப் பெருங்குடிகள் தாய்மொழியின்பால் தம் கடப்பாடு செலுத்தாதது அறக்கொடியதென்றும், தமிழ்நாட்டு மடாதிபதிகள் அருமைத் தமிழைப் பரிபாலிக்கும் தங்கருமத்தில் தளர்வுற்றிருப்பது சாலவும் விசனிக்கத்தக்கதென்றும், சேதுபதியவர்கள் காய்தலுவத்தல் அகற்றி யாவருக்கும் ஒப்ப அவரவர் கடமையினை வற்புறுத்தினார்கள். தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களில் ஒரு வகுப்பினர் தாம் உயர்ந்தோர் ஏனையோர் இழிந்தோர் என்றும், தமிழ் மொழி ஆரியத்தின் வழித்தோன்றியதெனவும் பிதற்றிக்கலாம் விளைத்தும், பேசுந்தொறும் எழுதுந்தொறும் தமிழ்மரபுக்கு முரணாகவும், இலக்கண வரம்பிகந்தும், மணிப்பிரவாளம் போன்றதான கொச்சைத் தமிழைப் பெருக்கியும் வரும் போலித் தமிழரைப்போலாது தாம் யாவரும் தமிழ்ப் பெருங்குடியின் வழித்தோன்றல்கள் எனவும், தாய்மொழிவளர்த்தல் தம் கடன் எனவும் கொண்டு சேதுபதியவர்கள் எடுத்துக்கூறிய தமது கடப்பாடுகளைத் தவறாது செலுத்தித் தமிழை வளம் பெறச் செய்வது நம் முதற் கடன் என்று தமிழபிமானப் பெருந்தகையாளர்களை மன்றாடி வேண்டுகின்றோம்.

இனி, இத்திருவிழாவில் சேதுபதியவர்கள் முகவுரைப் பிரசங்கம் முடிந்த பிறகு கீழ்க்கண்டவை நடைபெற்றன :—

## க. தீர்மானங்கள்.

க. நமது ஆங்கிலத் துரைத்தனத்தார் செர்மானியருடன் செய்து வரும் போரில் கூடிய சீக்கிரம் நமக்கு வெற்றியைக் கொடுத்து



உலகத்தைச் சுகம் பெறச் செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(பாப்பாநாடு சமீன்தார் சீமான் இராவ் பகதூர் சுவாமிநாத விசயத்தேவர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, பூண்டி சீமான் இராவ் பகதூர் வீ. அப்பாசாமி வாண்டையார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.)

உ. தஞ்சை சில்லா கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாவது வருடப் பூர்த்திக்கொண்டாட்டக்காலத்துக்கூடிய மகாசபையிலுள்ள தமிழரெல்லாம், சருவகலா சங்கத்துத் தமிழகராதிச்சபையார் இன்னும் அதிக திருப்திகரமாகத் தங்கள் அகராதி வேலையை நடத்துவது அத்தியாவசியகமாமென்று தீர்மானித்து, இத்தீர்மானத்தை இவ்விடயத்திற் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் இன்னவை என்பதுடன் அரசாங்கத்தாருக்கு அனுப்பும்படி அக்கிராசனாதிபதியவர்கட்கு இதன் மூலம் அதிகாரங் கொடுத்திருக்கிறார்கள்.

(பண்டிதர் சீமான் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களால் பிரேரேபிக்கப்பெற்று, சீமான் அ. கணபதி பிள்ளை அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.)

ங. தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஐந்தாவதாண்டுத்திருவிழாவின் காலத்துக்கூடிய மகாசபையிலுள்ள தமிழரெல்லாம், சென்னை இராசதானிக்கல்லூரி (Presidency College) யில் தமிழ்மொழிக்காக ஒரு போதனாசாரியத்தானம் (Professorial Chair) தாபிக்கவேண்டியது அவசியம் என்று தீர்மானித்து, இத்தீர்மானத்தை அரசாங்கத்தாருக்கு அனுப்பும்படி அக்கிராசனாதிபதியவர்கட்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

(அரித்துவாரமங்கலம் சீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியார் அவர்களால் பிரேரேபிக்கப்பெற்றுக், கோனுப்பட்டுச் சீமான் சாமிநாதையர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.)

## உ. உபந்நியாசங்கள்.

க. தற்காலத்தமிழ் நடை—பண்டிதர் சீமான் அ. கந்தசாமி பிள்ளை அவர்கள், அங்கத்தினர், கோயமுத்தூர்.

உ. கம்ப ராமாயணம்: தசரதர் வாய்மையும், கைகேயிகொடுமையும்—சீமான S. சோமசுந்தர பாரதிகள், M. A., B. L., தூத்துக்குடி.

ங. சங்க இலக்கியங்கள்— பண்டிதர் சீமான் நா. இராகவையங்கார் அவர்கள், இராமநாதபுரம்.

ச. பஞ்ச லிவாரணம்—சீமான் A. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள், தூத்துக்குடி.

ரு. கல்விப்பயிற்சிக்குச் சிறந்தவழி தாய்மொழி—சீமான் V. இராதா கிருட்டின பிள்ளை அவர்கள், B. A., அங்கத்தினர், தனுக்கோடி.

௬. தமிழ்ப்பெருமை—ஸ்ரீமான் T. C. ஸ்ரீனிவாசையங்கார் அவர்கள், B. A., B. L., மதுரை.

௭. தமிழரும், ஆரியரும்—ஸ்ரீமான் அ. சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள், தமிழ்ப் பண்டிதர், திரிசிரபுரம்.

௮. இந்தியர் கைத்தொழில் முயற்சி—ஸ்ரீமான் கோ. நடேசையர் அவர்கள், தஞ்சை.

௯. தமிழ்த் தொன்மையும், தமிழர் கடமையும்—மறைத்திருவன், விருதை. சிவஞானயோகிகள், கோவிற்பட்டி.

இவ்வாறுவந்து பயனுதவும் வானமே யென்ன, வரைவில் செவிச்செல்வம் வாரியுதவிய இப்பேரருள் வள்ளல்கள் மாட்டு யாம் பாராட்டும் நன்றி அளவிடற் பாலதோ?

## அங்கத்தினர்.

வழக்கம் போலவே இவ்வருடமும் அங்கத்தினர் எண் பெருகி நிற்கின்றது. கடந்த ஆண்டில் உறுப்பினராயிருந்தார் ஒரு நூற்றைம்பத்தைவர். இவ்வாண்டில் நம் சங்க முயற்சிகளில் அபிமானங்கொண்டு சேர்ந்தார் நாற்பத்தொன்பதின்மர். சங்கத்தினின்றும் விலகிக்கொள்ளும் வழியேகினோர் நால்வர். காலகதியால் இறைவன் திருவடி யெய்தினோர் ஒருவர். ஆகவே இவ்வாண்டினிறுதியில் உறுப்பினராயமர்ந்திருப்பவர் தொகை ஒருநூற்றுத் தொண்ணூற்றொன்பது. (சேர்ப்பு—க). எம்முயற்சி நலங்கண்டு இம்முயற்சியிற்றாமும் உதவிவர வேண்டுமெனத் திருவுளங்கொண்டு ஆடவரேயன்றிப் பெண்டிரும் இச்சங்கத்தின் அங்கத்தினராய்ச் சேர்ந்திருத்தலையும், போதிநாயக்கனூர்ச் ஸ்ரீமான் வ. அழகண்ணன் செட்டியார் அவர்கள் விதிக்கப்பட்ட சந்தா ரூபா ஐம்பதையுங்கொடுத்து ஆயுட்கால அங்கத்தினரானதையும், ஆயுங்கால் இவை தமிழருக்கும் தமிழுக்கும் நற்காலம் பிறந்தமைக்குப் போதிய சான்றுகளாம். யாம் எடுத்த கருமத்தின் பெருமையினைத் தேர்ந்து தமிழன்பர் யாவரும் எம்முயற்சியில் தலைப்பட்டுவந்து சங்க உறுப்பினராய்ச் சேர்ந்து எம்மை ஊக்குவார்களென்று வேண்டுகின்றோம்.

## கூட்டங்கள்.

இவ்வாண்டில் சருவ அங்கத்தினர் கூட்டம் இரண்டும், நிருவாக சபையார் கூட்டம் பதினைந்தும் ஆகப்பதினேழு காரியக்கூட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. வழக்கம் போலவே உள்ளூர் அங்கத்தினர்க்குள் நடைபெறும் பெரிய புராணப் பயிற்சிச் சபைகளும் நிகழ்ந்து அது இவ்வாண்டில் நிறைவேறப்பெற்றது. தம் சிரமம் கருதாது உள்ளன்போடு இதனை முடித்து வைத்த ஸ்ரீமான் சிவ. சோலைமுத்துப்பிள்ளை அவர்களுக்கும், ஸ்ரீமான் வே. இராமசாமி வன்னியர் அவர்களுக்கும் இச்சங்கத்தார் என்றும் நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறார்கள். இவையன்றி இவ்வாண்டில் எட்டு விசேடக்கூட்டங்கள் நடைபெற்று, அடியிற்கண்ட விவரப்படி பிரசங்கங்களும், தீர்மானங்களும் செய்யப்பட்டன :—

௧ நளஞு ஆடிமீ ௨௯, ஆவணிமீ ௰௨ (13, 27—8—1916) தேதிகளில் தஞ்சை, ஸ்ரீமான் இராவ் பகதூர் K. S. ஸ்ரீனிவாசபிள்ளை அவர்கள் ‘தமிழகம்’ ‘வஞ்சி’ என்று இரண்டு அருமையான பிரசங்கங்கள் புரிந்தார்கள்,



௨ நளஞு ஐப்பசிமீ ௬ (22—10—16) திரிசிரபுரம் பண்டிதர் ஸ்ரீமான் டி. சவரிராய பிள்ளை, M. R. A. S. அவர்கள், தலைமையில் நடுத்தரப் (Intermediate) பரீட்சைக்குத் தமிழ் வியாசமெழுதுமுறையில் பேச்சுவழக்குச் சொற்களைக் கலந்தெழுதும் ஓர் அளவினைத் தீர்மானிப்பதற்கென்று சென்னைச் சருவகலா சங்கத்தாரின் ஆலோசனை. சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காரிய ஆலோசனை சபையாரின் முடிவுகள் ஆராயப்பட்டு அடியிற்கண்ட தீர்மானங்கள் ஸ்ரீமான் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B.A., B.L. அவர்களால் பிரேரேபிக்கப்பெற்று, ஸ்ரீமான் அ. சேகராய பிள்ளை B.A., B.L. அவர்களால் ஆமோதிக்கப்பட்டு யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டன :—

(௧) தமிழ் வியாசமெழுது முறையில் பேச்சுவழக்குச் சொற்களின் அளவைத்தீர்மானிக்க ஏற்பட்ட காரியஆலோசனை சபையானது போதுமான பிரதிநிதிகளுடன் கூடியதல்லாதது பற்றியும், யாதொரு தீர்மானமும் கொள்வதற்குமுன் கலாசாலைப் பண்டிதர்களும், தமிழ்ச்சங்கங்களும், பிரசித்திபெற்ற தமிழறிஞர்களும், ஆசிரியர்களும் கலந்து ஆலோசிக்கப்படாததுபற்றியும் இக்கூட்டமானது மிகவும் விசனிக்கின்றது.

(௨) தமிழ் வியாசமெழுதுவதற்குப் பேச்சுத்தமிழில் ஓர் அளவு ஏற்படுத்திக்கொள்ளலாமெனக் கருதியமாத்திரத்தில் சருவகலா சங்கத்தின் ஆலோசனை சபையார் தொடக்கத்திலேயே பிசகிவிட்டனரென்றும், இதுவரையிலும் கொண்டு வந்த ஓர் எழுத்து நடையை விட்டுப் புதியதோர்வழிகடைப்பிடிப்பது, தமிழ்மொழியில் உயர்தரமான செவ்விய நடையைக் கற்றறிந்து கொள்வதற்கு அழிவைத் தேடித்தருகின்றதென்றும் இக்கூட்டம் கருதுகின்றது.

(௩) மேலே கூறப்பட்ட காரியஆலோசனை சபையாரின் இரண்டாவது தீர்மானத்தை இந்தக்கூட்டம் சிறிதும் ஒப்புக்கொள்ளாததுடன் இப்பொழுதுள்ள தமிழ் நெடுங்கணக்கு ஒருவிதத்திலும் பின்னப்படுத்தப்படக் கூடாதென்றும், பிறமொழிகளிலிருந்து தமிழ்மொழியில் ஏற்றுக்கொள்ளப்படும் வார்த்தைகள் தமிழ்மொழியின் ஒலியிலக்கணத்திற்குப் பொருந்துவனவாகத் தோன்றும்படியே செய்யப்பட வேண்டுமென்றும், பிறமொழி யெழுத்துக்களின் உச்சாரணத்தை ஏற்றுநிற்கப் புதியவெழுத்துக்களைக் கற்பித்துக்கொள்ளச் செய்யும் முயற்சியானது தமிழ் மொழியின் ஒப்பற்ற விசேடநிலையைக் கெடுத்து அதன் இலக்கணத்தின் தோரணையழகையும் சின்னபின்னமாக்குமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(௪) இலக்கணத்தாலும் வழக்காலும் ஒப்புக்கொள்ளப்படாத காரணத்தால்; மொழிகள் புணரும்போது சந்திவிதிகளைக் கவனித்தாலும் கவனிக்காவிடினும் பாதகமில்லையென நெகிழவிடுவதை இக்கூட்டமானது உறுதியாக மறுத்து நிற்கின்றது.

(௫) காரிய ஆலோசனை சபையாரின் அறிக்கையின் இரண்டாவது அநுபந்தத்தில் உதாரணமாகக்காட்டப்பட்ட “மரத்தைகண்டான்”

என்பதுபோன்றவற்றில் சந்திவிதியை இஷ்டப்படித் தழுவிக் கொள்வது இயற்கைவிரோதமானதென்றும், 'மரத்தைக்கண்டான்' எனக் ககர வொற்றிரட்டித்தலை வேண்டுகின்ற சாதாரண செவி யின்ப உச்சரிப்பிலக்கணத்திற்குமாறாக உள்ளதென்றும் இந்தக் கூட்டமானது அபிப்பிராயப்படுகிறது.

(ச) இரண்டாவது அநுபந்தத்தில் மூன்றாவது விடயமாக விலக்கப் பட்ட சந்திகளுக்குக் காட்டப்பட்ட உதாரணங்களும் அவை கொடுக்கப்பட்ட உத்தேசமும் தெளிவில்லனவாயும் அறியக் கூடாதனவாயு மிருக்கின்றன.

இத்தீர்மானங்கள் சருவகலா சங்கப்பதிவதிகாரியாருக்குத் தெரிவிக்கப் பட்டன.

௩. ஈளஞூ ஐப்பசிமீ உஎ௨ (12—11—16) தஞ்சையைச் சேர்ந்த பள்ளியக்கிரகாரத்தில் நம் சங்கத்தலைவர் ஸ்ரீமான் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, B A., B.L அவர்கள் அக்கிராசனத்தில் நடந்த கூட்டத்தில் அடியிற் கண்ட விடயங்கள் நிகழ்ந்தன :—

(க) கடவுள்—ஸ்ரீமான் ப. சிங்காரவேலுப்பிள்ளை அவர்கள், அங்கத் தினர், பள்ளியக்கிரகாரம்.

(உ.) நல்வழி—ஸ்ரீமான் வி. சாமிநாத பிள்ளை அவர்கள், தமிழ்ப் பண்டிதர், நாகபட்டினம்.

(ங) வருணாசிரமதருமம்—ஸ்ரீமான் அ சிவப்பிரகாசம் பிள்ளை அவர் கள், தமிழ்ப் பண்டிதர், திரிசிரபுரம்.

(ச) திருவள்ளுவரும், தமிழ்மொழியும்—பண்டிதர் ஸ்ரீமான் ம. வேங் கடசாமி நாட்டார் அவர்கள். அங்கத்தினர், திரிசிரபுரம்.

௪. ஈளஞூ கார்த்திகைமீ உக௨ (5—12—16) முதல் திருவையாறு ஸ்ரீமான் சசி. இராமையர் அவர்கள், 'பெரியபுராண ஆராய்ச்சி' சம் பந்தமாக மூன்று பிரசங்கங்கள் செய்தார்கள்.

௫. ஈளஞூ மாசிமீ க௨ (20—2—17) கோட்டையில் அங்கத்தினர் ஸ்ரீமான் த. பீ. சோமநாதராவ் அவர்கள் தலைமையில், கோயமுத்தூர் 'தமிழ் அபிதானநூல்' பதிப்பாசிரியர் ஸ்ரீமான் M. V. ஈசுவர ஐயர் அவர்களால் 'தற்காலத் தமிழ் நூல்களின் நிலைமை' என்ற விடயம் பிரசங்கிக்கப் பட்டது.

இச்சங்கத்தை அபிமானித்து அன்போடு வந்து பிரசங்கம் முத லியன செய்து கவுரவித்த மேற்கண்ட அறிஞர்களுக்கு இச்சங்கத்தார் வந்த னம் உரியதாகும்.

முன்னையைவிட விசேடமாக இச்சங்கக் கூட்டங்கள் இக்கரந்தை யில் நடைபெறுவதோடு, இச்சங்க முயற்சிகள் யாவருக்கும் தெரியவும், அதனாலே ஆங்காங்குள்ள அன்பர்கள் ஒன்று கூடி உழைக்கவும், எதனாகப் பலவிடங்களிலும் கூட்டங்கூடிப் பிரசங்கம் முதலியன வியற்றிச் சங்கக் கொள்கைகளையும் பரவச்செய்யவேண்டுமென உண்மையன்பர்கள் கேட்டுக்



கொண்டபடி இவ்வாண்டிற் றொடக்கமாகப் பள்ளியக்கிரகாரத்திலும், கோட்டையிலும் சபைகள் கூடின. இக்காலங்களில் எம்மை உள்ளன்போடு வரவேற்று, இச்சபைகளை மிக விமரிசையாக நடத்தி மகிழ்ந்த அவ்வவ் வூரார்களுக்கு யாம் செய்யக்கூடிய கைம்மாறு என்னுளது? அவர்கள் மேன்மேலுந் தழைத்தோங்கி. நீடூழி வாழ்ந்து இன்னும் பல சபைகூட்டி மகிழவும், இவர் வழிமேறகொண்டு இவரே போல் மற்றைய ஊராரும் விளங்கவும் அருள் புரியுமாறு இறைவனைத் துதிக்கின்றோம்.

## புத்தகசாலை.

இதுவும் வழக்கம்போலவே வளர்ந்து வருகிறது. சென்றவாண்டி னிறுதியில் 538 புத்தகங்கள் இருந்தன. இவ்வருடத்தில் விலைக்கு வாங்கி யனவும். நன்கொடை வந்தனவுமாகச் சேர்ந்தன 190 நூல்களாம். (சேர்ப்பு 2.) ஆக இவ்வாண்டின் இறுதியில் கலாநிலையத்திலிருப்பன 728 நூல்களாகும். கல்விப் பயிற்சிக்கு இன்றியமையாத சாதனமாகிய அரிய நூல்களைத் தந்துதவுவது எத்துணை உபயோகமென்பதை யாவரும் அறிவீர் கள் ஆகையால் தமிழ் மக்கள் இன்னும் அதிக நன்கொடை நூல்கள் மூலமாய் இப்புத்தகசாலையை ஆதரித்து முன்னேறச் செய்யப் பின்னும் வேண்டுகின்றோம்.

## எமது நோக்கம்.

சங்கத்தின் நோக்கங்கள் முற்றுப் பெறுவதற்கான வழிகளுட் சிலவற் றில் எம் முயற்சியிலை கீழே குறிக்கப்பெறுகின்றது :—

### க. செந்தமிழ்க் கைத்தொழிற் கலாசாலை.

சென்ற ஆண்டு அறிக்கையிற் குறிப்பிட்டபடியே இக்கல்விக்கழகம்
நமது ஆதரிப்பாளர் ஸ்ரீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியார்
F. T. S., O. S. E., அவர்கள் ஆசிமொழியோடு ஈளஞூ புரட்டாசிமீ உக௨
(6—10—1916) விசயதசமி யன்று தாபிக்கப்பெற்றது. இக்கழகம்
நாளுக்குநாள் விரிவுற்று வருகின்றது. இப்பொழுது நாற்பது பிள்ளைகள்
படிக்கிறார்கள். இக்கழகத்தில் கைத்தொழில் பயிற்றுவிப்பது எமது
முடிந்த நோக்கமென்றாலும் தற்காலம் ஏற்பட்டுள்ள வருவாய்க்கு ஏற்பப்
பிரதம கல்விமட்டுமே நடந்து வருகிறது. எமது நோக்கத்தை முற்ற.
முடிக்க இடம், பொருள், ஏவல் முதலிய சாதனங்களை அவாவியுள்ளோம்.
இக்கழகத்தின் பராமரிப்பிற்கென எம் அருமைத் தலைவர் அவர்கள் மாதம்
இருபத்தைந்து ரூபா உதவிவருகிறார்கள். அன்றியும், இக்கழகத்தின் அவசி
யத்தையும், உபயோகத்தையும் கண்டறிந்த இவ்வூர் வியாபாரிகள் தம் செய
லுக்கேற்பத் தினந்தோறும் உண்டிகைத்தருமம் செய்து வருகின்றனர். இன்
னும் அடியிற்கண்ட ஸ்ரீமான்கள் விசேட நன்கொடையும் புரிந்துள்ளார்கள்.

ஸ்ரீமான் த. வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள், B.A., B.L., ரூ 60
ஸ்ரீமான் ஐ. குமாரசாமிபிள்ளை அவர்கள், B. A., ... ரூ 60
ஸ்ரீமான் N. வேங்கடசாமி நாயுடு அவர்கள், B. A., வருடம் ஒன்றுக்கு ரூ 25

இத்தகைய, சுய நலமே கருதாத உத்தமகுணப் பெருந்தகையாளர்களுக்கு, இச்சங்கத்தார் மாத்திரமன்றி, இத்தமிழுலகு முழுதுமே நன்றி பாராட்டக்கடமைபட்டுள்ளது. இவர்கள் நடையைக் கடைப்பிடித்து, இவ்வூரிலும், பிறவூர்களிலுமுள்ள மற்ற வியாபாரிகளும் பிறரும் தத்தமாலியன்றவரை உதவிபுரிந்துவரின். இக்கழகம் மேன்மேலும் வளர்ந்தோங்கித் தமிழர்கள் கலைபயின்று கடைத்தேறி முன்னுக்கு வருதற்கோர் பயிலிடமாகுமென்பதிற் சந்தேகமில்லை.

## உ. இலவசப்படிப்பிடம்.

நம் மருமைத் தமிழ்மக்களின் அறிவைப் பரவச்செய்வதற்கோர் வழியாக ஏற்பட்ட இப்படிப்பிடம் யாம் எண்ணியபடியே ஒரு பெருங்குறையை நீக்கி யாவருக்கும் மிகுதியும் பிரயோசனமாக விருக்கின்றது. சென்றவாண்டிற் போலவே இவ்வருடத்திலும் "சுதேசமித்திரன்" தினப்பதிப்பு வந்துகொண்டிருக்கிறது. மதுரைத்தமிழ்ச் சங்கத்தாரால் இனமாய் அனுப்பப்பெறும் 'செந்தமிழ்"ப்பத்திரிகையும் உபயோகமாவதோடு, எம் மருமைத் தலைவர் அவர்களால் 'Justice.' 'சித்தாந்தம்.' 'கிருஷிகன்' முதலியனவும், இச்சங்க அங்கத்தினராகிய சீமான் அ. கந்தசாமிபிள்ளை அவர்களால் தாம் பிரசுரிக்கும் 'சைவப்பிரகாசம்' என்னும் பத்திரிகையும் உதவப்பெற்று உபயோகமாகிவருகின்றது. இவ்வுபகாரிகளுக்கு எம் வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

இப்படிப்பிடத்தின் உபயோகத்தைக் கண்டறிந்து மதித்து, இதனை இன்னும் அதிகமாக உபயோகமாகச் செய்யவெண்ணி இத் தஞ்சை நகர்ப் பரிபாலன சபையார் (Municipality) 1917—18 வருடம் முதல் வருடந்தோறும் நூறுரூபா உதவுவதாகத் தீர்மானித்தமை எமக்குப் பெருமகிழ்வையும், மிகுந்த ஊக்கத்தையும் தருகின்றது. இச் சபையாருக்கும், இவரது தீர்மானத்தை அன்புடன் அங்கீகரித்த சென்னை அரசாங்கத்தாருக்கும் யாம் மிகுதியும் நன்றி பூண்டு வந்தனம் செய்யவேண்டிய எம்கடப்பாட்டைத் தெரிவித்துக்கொள்வதோடு, இவ்வுதவிகொண்டு இப்படிப்பிடத்தை வளப்படுத்தி, இன்னும் அதிக உதவிகளுக்குப் பாத்திரராக்கிக்கொள்வோம் என்னும் எம் திண்ணிய எண்ணத்தையும் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

## ௩. கல்விக்காகப் பொருளுதவி.

சென்ற ஆண்டு அறிக்கையிற் குறிப்பிட்டபடியே, தம் பெயர் தெரித்து புகழ் விரும்பாத ஒரு புண்ணிய சீலரின் நன்கொடையிலிருந்து கோ. அமிர்தலிங்கம் என்னும் மாணவர் தம் படிப்பிற்குப் பொருளுதவி பெற்று வருகின்றனர். இன்னும் தக்க மாணவர் சிலர் இவ்வகை உதவி நாடிவேண்டினாராயினும், சங்கவியல்பு இடந்தாராமையின் மிக்க மனத்தளர்ச்சியோடு எம் செயலின்மையை அவர்க்குத் தெரிவிக்கவேண்டியதாயிற்று. 'அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையுநாட்டும், உறுங்கவலொன்றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லை, சிற்றுயிர்க்குற்ற துணை.' ஆகையால் ஊனக்கண்ணினுஞ் சிறந்த ஞானக்கண்ணை மேம்பாடுடைத் தெனத்தேறி கல்விக் கருந்தனம் தேட ஆவலோடு புக்குப் பொருட்பேறின்றிக் கலங்கிவாடும் தக்க மாணவரை, இக்குறை நீக்கிக்



கைதூக்கி உதவும் நல்லெண்ணம் மற்றத் தமிழ்ச்செல்வர் மனத்தகத்தும் புகுந்தியக்குமாறு அருள்புரிய எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

### சங்கப்பிரசுரம்.

ஐந்தாம் ஆண்டுத் திருவிழாவில் இச்சங்க அங்கத்தினராகிய சீமான் வே. இராதாகிருட்டின பிள்ளை, B. A., அவர்களால் பிரசங்கிக்கப்பட்ட 'கல்விப்பயிற்சிக் குரியது தாய்மொழியே' என்ற வியாசம் இவ்வருடம் 'தமிழவள் கமழ்மொழி' வரிசையில் மூன்றாவதாகப் பிரசுரிக்கப்பட்டது.

### கிளைச்சபை.

திருச்சியில் தாபித்துள்ள நமது கிளைச்சபை இச்சங்க நோக்கங்களை எளிதிலும், விரைவிலும் நிறைவேற்றி வைப்பதற்கானவழிகளில் முயற்சித்து வருதல் யாவரும் அறியக்கிடக்கின்றது. இஃது இக்கிளைக்காரியதரிசியார் எழுதியனுப்பி இத்துடன் சேர்க்கப்பட்டுள்ள தனி அறிக்கை (சேர்ப்பு ௩) யினாலும் தெரியலாகும். இக்கிளைச்சபையார் பொதுவாகச் சங்க அபிவிர்த்திக்கு உழைத்து வருதலோடு தாமும் தமிழ்பயின்று தேர்ச்சிபெற்று வருதல் எமக்குப் பெருமகிழ்வளிக்கின்றது. தமக்குள்ள பலவேலைகளினும் இக்கிளைச்சபையாருக்குத் தமிழறிவுறுத்தலே முதற்கடனாகக்கொண்டு மிக்க ஆனந்தத்துடன் பாடம் பயிற்றி வரும் பண்டிதர் சீமான் மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களுக்கு யாம் மிகுதியும் ஈடுபட்டு நன்றி பாராட்டுகிறோம். இனிப் பலவிடங்களிலும் இக்கிளை போன்ற கிளைகளைக் கூட்டித் தமிழன்பர் எல்லாரும் தமிழபிவிருத்தி செய்தலில் முயற்சித்து எமக்குதவிபுரிந்து வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

### வருவாய்.

நமது அங்கத்தினரிடமிருந்து வசூலிக்கப் பெறும் சந்தாத் தொகையினையன்றி அருந்தமிழன்பர்கள் தமதில்லங்களில் நிகழ்பெறும் சுபசோபனாதிச் சடங்குகளில் உதவுவனவும், நன்கொடைப் பொருளும், உண்டிகைத் தருமமும், பிடியரிசித்தானமும். அங்கத்தினர் தம்வருவாயுட் பகுதி வழங்குதற் பொருளுமே நமது சங்கத்தின் வருவாய்களாம். நம் சங்கத்தின் முயற்சியும் பயனும் அதன் வருவாயினைக் கொண்டே தீர்மானிக்கப்படுதலின், இதனை வளர்க்குமாறு காண்டல் தமிழகத்தைப் பொறுத்ததோர் முக்கிய கடனுமென்பதும் யாம் கூறாதே தெளியக் கிடப்பதாம். இவ்வுத்தம நெறியைக் கடைப்பிடித்து நம் சங்கமுயற்சியைத் தழைக்கச் செய்த தமிழபிமானிகளான உத்தம சீலர்களின் விவரம் கீழேகாண்க :—

க சீமான் கோவிந்தசாமி வன்னியர் அவர்கள், மேலமாகாணம்—மக்கள் திருமணம்—ரூ 25.

உ. ,, கு பேச்சுமுத்துப்பிள்ளை அவர்கள், சுங்கந்திடல்—சகோதரர் திருமணம்—ரூ 12 பெறுமான புத்தகம்.

௩. ,, ச. முத்துசாமி பிள்ளை அவர்கள், திரிசிரபுரம்—சந்ததிப்பேறு—ரூ 20.

ச ,, மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், திரிசிரபுரம்—மகப்பேறு—ரூ 1.

௫. சீமான் நா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், திரிசிரபுரம்—தந்தையார் திவசம் ரூ 0—2—0.

௬. ,, சோ. வன்மீகநாதபிள்ளை அவர்கள், திரிசிரபுரம்—தந்தையார் திவசம்—ரூ 0—4—0.

௭. ,, பா கலியாணசுந்தரம் பிள்ளை அவர்சள், கரந்தை—முதல் மனைவியார் திவசம்—ரூ 0—2—0.

இனி இக்கரந்தை வியாபாரிகள் அனுட்டித்து வருவது போல் யாவரும் உண்டியற்றருமம் செய்துவரினும், திருச்சிராப்பள்ளி அன்பர்கள் போல் பிடியரிசி தந்துதவினும், இன்னுஞ் சில அபிமானிகள் போலத் தம் வருமானத்தில் ஒரு சிறு பகுதியைச் செலுத்திவரினும், மிக விரைவிலும், இலேசிலும் அரியபெரிய காரியங்களைச் சாதித்து விடலாமென்பது நிச்சயம் இவ்வகைச் சிற்றுதவிகள், கொடுப்பார்க்கும் கடிதின்றாய்க், கொள்வார்க்கும் உறுபயன் பயப்பதாய் இருவழியினுஞ் சிறந்திருத்தல் தமிழன்பர்கள் நோக்கத்தக்கதொன்றாம்.

இடம்.

இவ்விடந் தேடித் தேடிக் கிடைக்கப் பெறாமையின் ஏமாந்திருந்த எம். இடக்குறை, தருமபுரம் டிப்டி கலெக்டர் சீமான் N. வேங்கடசாமி நாயுடு, B. A., அவர்கள் பேரன்பினாலும். சீமான் வாசுதேவ நாயக்கரவர்கள் குமாரர்கள் சீமான் வா. கோவிந்தராசலு நாயுடு அவர்கள், சீமான் வா. சுப்பராயலு நாயுடு அவர்கள் உதவியினாலும் அகன்ற செய்தியைச் சென்ற ஆண்டு அறிக்கையில் விவரமாகக் கூறியுள்ளோம். இவ்வாண்டில் சீமான் N. வேங்கடசாமி நாயுடு, B. A., அவர்கள் சங்கத்திற்கு விசயஞ்செய்து, சங்கமுயற்சிப் பலன்களையெல்லாம் தம் கண்ணெதிரே கண்டு பெருமகிழ்வுற்று, இச்சங்கம் தம்மிடத்து இன்னும் அதிக உதவி பெறுதற்குப் பாத்திரமாய தென்றுணர்ந்து, தமக்குச் சொந்தமாய இன்னொரு சத்திரத்தையும் இச்சங்க உபயோகத்திற்காக விடுத்ததுமன்றி, அதைப் பழுதுபார்த்தற்கான செலவைத்தாமே கொடுக்கச் சம்மதித்திருப்பதோடு, சங்கக்கலாசாலைக்குப் பொருளுதவி செய்தும் வருகின்றார்கள். இத்தகைய மெய்ச்சீரான நெறியை மற்றைத் தமிழச் சீமான்களெல்லாம் கடைப்பிடித்தொழுகத் தலைப்பட்டாராயின், நம்மருமைத் தமிழும், தமிழரும் இன்றைக்கே தம்முன்னைய உன்னத நிலையை அடைந்துவிட்டார்களெனச் சத்தியமாய்ச் சொல்லிவிடுவோம். சீமான் N. வேங்கடசாமி நாயுடு அவர்கள் காலத்தாற் செய்த உதவி ஞாலத்தின் மாணப்பெரிதென்பதல்லது, கைம்மாறு வேண்டா அவர்கள் மாட்டு யாம் செயக்கிடந்த பிரதிபலன் என்னுளது ? எம்பால் இவர்கள் பேரபிமானம் நாடொறும் வளர்ந்து, இவர்கள் எல்லா இன்பமும் ஒருங்கே பெற்று, யாவருக்கும் எடுத்துக்காட்டாய் நீடு வாழ்கவென எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை எம் சித்தத்துட் பதித்துத் துதிக்கின்றோம்.

விசயஞ்செய்தோர்.

மேலே குறித்தபடி சீமான் N. வேங்கடசாமி நாயுடு அவர்களோடு, தஞ்சை சில்லா தபால் மேல் விசாரணையாளர் சீமான் T. மாரிமுத்துப் பிள்ளை, B. A., அவர்களும், தஞ்சை நகரப் பரிபாலன சபைத்தலைவர்



சீமான் R. சக்கரபாணி ராவ் B. A., அவர்களும் சங்கத்திற்கு எழுந்தருளி சங்கமுயற்சி நலங்களைக் கண்ணாரக்கண்டு பெருமகிழ் வெய்திக் கொண்டாடி எம் முயற்சி மேன்மேலும் பெருகி வளம்பெறுக வென வாழ்த்தியதோடு, அதற்காகத் தத்தமாற்கூடிய உதவி புரிவதாயும் வாக்களித்துள்ளார்கள்.

இரங்கல்.

நம் சங்கத்தின்பால் மிக்க ஆதரங்கொண்டு ஒருவருடச் சந்தாவை முன்பணமாக உதவி உள்ளன்போடு சங்க உறுப்பினராய்ச் சேர்ந்து மகிழ்ந்த கூடலூர் சீமான் அரங்கசாமி வன்னியர் அவர்களை யாம் இழந்து ஆறாத் துயரடைந்துள்ளோம். தமிழன்பராகிய புதுக்கோட்டை மகாராசா கலாசாலைத்தலைவர் சீமான் V. இராதாகிருட்டினையர், B. A. அவர்கள் காலஞ் சென்ற செய்திகேட்டு விசனிக்கின்றோம்.

நன்றிகூறல்.

இச்சங்க ஆதரிப்பாளர்களாகிய, கொடை, நடை, புலமைத்திறங்களால் தமிழகமுழுதும் தம் புகழ் பரப்பிய பெருந்தன்மைச் சீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியார், F. T. S., O. S. E., அவர்கட்கும், வரையாது கொடுக்கும் வள்ளன்மையினாற் கொடைமடம் பட்ட குறைவில் சீமான் ஆண்டிப்பட்டி சமீன்தார் சா. றம. மு. சித. பெத்தாச்சி செட்டியார், M. R. A. S., அவர்கட்கும்; நமது சங்கத்தின் முன்னேற்றத்திற்கே தமது உழைப்பிலும், ஓய்விலும் இன்னும் உறக்கத்திலுங்கூடக் கண்ணுங் கருத்துமாய் எம்மொடு கலந்து உறவு பூண்டு உழைத்துவரும் எங்களருமைத் தலைவர் அவர்கட்கும்; சங்க காரியங்களில் மிக்க ஊக்கங்கொண்டுள்ள அங்கத்தினர் சீமான் ஐ. குமாரசாமி பிள்ளை, B.A., அவர்கள், சீமான் க. சண்முகம் பிள்ளை, B. A., B. L., அவர்கள், சீமான் த. பீ. சோமநாதராவ் அவர்கள், சீமான் M. S. கலியாணசுந்தரமையர் அவர்கள் முதலிய இடையறாச்சங்காபிமான சீலர்களுக்கும்; இச்சங்க அமைச்சர் பதவியை யாவரும் மெச்ச வகித்து, யாம் வேண்டவும் வேண்டவும் சங்க நன்மையையே கருத்திலுடையவர்களாய்த் தாம் அடிக்கடி இங்கிருந்து காரியங்களை நிருவகித்து வருதற்கியலாமை காரணமாக மனம் நொந்து பின்னும் அமைச்சு வேலையை மறுத்த உத்தமகுண உண்மையன்பர்களாகிய சீமான் R. வேங்கடாசலம் பிள்ளை அவர்களுக்கும்; எங்கள் நன்றிகூறி வந்திக்கின்றோம். சென்ற ஆண்டின் திருவிழாவுக்கு விசயம் செய்து சங்கத்தைக் கவுரவித்துப் பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்ந்து சென்ற கனவான்களுக்கும், திருவிழா விமரிசையாக நடந்தேறுதலில் மிக ஊக்கங் கொண்டு உதவி புரிந்துவந்த மிராசுதார்கள், காய்கறிக்கடை வியாபாரிகள், முதலிய அன்பர்களுக்கும், வழக்கம்போலவே யாம் வேண்டியாங்கு பேருதவி புரிந்துவரும் சீமான் இராவ் பகதூர் வி. அப்பாசாமி வாண்டையார் அவர்களுக்கும், திருவிழா நடத்தற்கும், பின்னும் வேண்டும்போதும் இடந்தந்துதவிய ஸ்ரீ கந்தப்ப செட்டியார் வழித்தோன்றல்களுக்கும் யாம் மிகுதியும் நன்றி பாராட்டக்கடமைப்பட்டிருக்கின்றோம். இன்னும், இச்சங்கமும், இச்சங்க உறுப்பினரும், மற்றைத் தமிழ்ப்பெருமக்களும், நம்மைப் புரந்தருளும் ஆங்கில இராசராசப் பெருந்தகையும் எவ்வகைச் சீருஞ் சிறப்புமெய்தி என்றென்றும் நிலவி வாழ்வார்களாக.

## வேண்டுகோள்.

நற்றமிழ்ச் சகோதர சகோதரிகளே !

நமது அருமைத் தாய்மொழியாகிய தமிழ் மொழி முற்காலத்தில் அடைந்திருந்த பெருமையினையும், இப்பொழுது அடைந்திருக்கும் தாழ்மையினையும் நீங்கள் எப்போதாவது நினைப்பதும் உண்டா? தேனும் பாலும் நாணும் உருசியும், மல்லிகை மருவாதி மலர்களும தோற்கும் மணமும் பொலியப் பல்குடை மன்னரும் பணிந்து போற்ற, அரச சிங்காதனத்திற் பரசவீற்றிருந்த நமது தமிழ்ப் பேரரசி தன் தொல்குடி மக்களொடு தளர் வெய்தினள். இவள் நம் அன்னை ! இவள் பெயர் சொல்லியே நீவிர் பிழைப்பது ! இத்தகையாரை நீங்கள் நினைப்பதும், அவர்க்குத் தொண்டு புரிவதும் நம் கடனன்றோ ? அன்னை ‘முன்னறி தெய்வம்’ என்பதையும் மறந்தீரோ ?

இக்கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார், இத்தொல்லரசி தன் பண்டைப் பீடுறவும், இவள் பழங்குடி வழிவந்த தமிழ்ப் பெருமக்கள் பிறரோ டொப்பப் பல்லாற்றானும் பெருமை எய்தவும் செய்ய மிகத் தாளாண்மை காட்டி வருகின்றனர்.

புண்ணிய சீலர்களாகிய தமிழரெல்லாம் மற்றக்கூட்டத்தாரினும் கீழ்ப்படாது உன்னத பதவியடைந்து தம் பண்டைக் கண்ணியம் பெறவும், நம மொழி எந்த மொழியினும் இழிவுறாது வளரவும் செய்து, என்றுங் கன்னித் தன்மையே கொண்டுள்ள நம்மருமைத் தண்டமிழ் மொழியினது பத்தினித் தன்மைக்குப் பங்கம் வாராது காத்தலுமே சுயநலங்கருதாத சுத்த வீரராகிய தமிழரது முதற்கடனாகும்.

அன்புடைச் சகோதரரே! அருளுடைச் சகோதரிகளே !

இதுவிஷயத்தில் இச்சங்கம் செய்துவரும் முயற்சிகளெல்லாம் ஆரம்பமும் ஒரு சிறிதுமேயாகும். யாம் நம்மருமைத் தெய்வ மொழியாம் தமிழ் மொழியினை இழித்துரைப்பார் மயக்கவுரையிற் றப்பி, அதன் தொன்மை, மேன்மை, முதலிய உண்மை நிலையினைக் கண்டறிந்து, ‘தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாக் கூட்டிச் சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே, தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலின் தெங்கின் தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி, யினித்தநறு நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி யெடுத்த சுவைக்கட்டியினு மினித்திடுந் தெள்ளமுதத்’ தமிழ்க் கடலிற்றிளைத்து, ஆனந்தித்து, ‘தாமின்புறுவதுலகின்புறக்கண்டு’ ஆகையால், இப்பேரானந்தத்தை எம்மொடு யாவரும் அனுபவிக்க வேண்டுமென்றாவல் கொண்டு, ‘காக முறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா கார’ தமிழ்ப், ‘போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமா, யேக வுருவாய்க் கிடக்குதையோ ! வின்புற்றிடநாமினியெடுத்த, தேகம்’ பொலியப் ‘புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே !’ என்றலறிக்கூவி யழைக்கின்றோம். இந்நிரதிசயானந்தத்தை என்றும் பெற்றுச் சாந்தி பெறுங்கள். நம் மருமைத் தமிழர் முன்னுக்கு வரவும்



நம் மருமைத் தமிழ் முதன்மை பெறவும் வேண்டுமென்னும் பேராசை நும் மனத்திற் குடிகொண்டிருப்பது உண்மையானால், நீவிர் உண்மையான நித்தியானந்தம் பெறவேண்டுமெனும் ஆவலுடையீரானால் இன்றைக்கே, இப்பொழுதே எம் முயற்சியை வளம் பெறுத்தி மகிழமுன்வந்து நம் மருமைத் தமிழ்த் தெய்வத்தை வழிபட்டு வாழ்த்துங்கள்.

அம்தமிழ்த் தெய்வத் தழகடி வாழ்க !
செந்தமிழ்த் தாயின் திருவடி வாழ்க !
பைந்தமிழ்த் தாயின் பாவடி வாழ்க !
நம்தமிழ்த் தாயின் நல்லடி வாழ்க !

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சை,
பிங்கள ஞு சித்திரை மீ.

அ. கணபதி,
அமைச்சர்.

## சேர்ப்பு. க.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை,

---

### ஆதரிப்பாளர்.

**ஸ்ரீமான் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியார் அவர்கள், F. T. S., O. S. E.**

**ஸ்ரீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்கள், M. R. A. S., ஆண்டிப்பட்டி சமீன்தார்.**

---

### சங்கத்தலைவர்.

**ஸ்ரீமான் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L.**

---

### அமைச்சர்.

**ஸ்ரீமான் அ. கணபதிப் பிள்ளை அவர்கள்.**

---

### உதவியமைச்சரும், நிதிக்கிழவரும்.

**ஸ்ரீமான் ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்.**

---

### திரிசிரபுரம் கிளை அமைச்சர்.

**ஸ்ரீமான் E. R. நடேசபிள்ளை அவர்கள்.**

---

### கணக்குப் பரிசோதகர்.

**ஸ்ரீமான் பா. கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள்.**

**ஸ்ரீமான் R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்.**

---

### நிருவாகசபையார்.

| | | | | |
|---|---|---|---|---|
| க | ஸ்ரீமான் | த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், | | B. A., B. L. |
| உ. | ,, | அ. கணபதிப் பிள்ளை | ,, | |
| ங | ,, | ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை | ,, | |
| ச | ,, | ஐ. குமாரசாமிப்பிள்ளை | ,, | B. A. |
| ரு | ,, | சி. தட்சணாமூர்த்திப்பிள்ளை | ,, | |
| சு | ,, | த. பீ. சோமநாதராவ் | ,, | |
| எ | ,, | க. சண்முகம் பிள்ளை | ,, | B. A., B. L. |

---



### அங்கத்தினர்.

| | | | | |
|---|---|---|---|---|
| க‡ | ஸ்ரீமான் | த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், | | B. A., B. L., வக்கீல், கரந்தை. |
| உ‡ | ,, | R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள், | | மிராசுதார், மோகனூர். |
| ங‡* | ,, | அ. கணபதிப்பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| ச‡ | ,, | வே. இராதாகிருட்டின பிள்ளை | ,, | B. A., உத்தியோகம், தனுக்கோடி. |
| ரு‡ | ,, | சி. தட்சணாமூர்த்தி பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| சு | ,, | R. கோவிந்தசாமி பிள்ளை | ,, | ஷை சீர்காழி. |
| எ‡* | ,, | R. கிருஷ்ணசாமி பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| அ* | ,, | T. N. குருமூர்த்தி பிள்ளை | ,, | வியாபாரம், திரிசிரபுரம். |
| கூ‡ | ,, | பா. கலியாணசுந்தரம் பிள்ளை | ,, | ஷை கரந்தை, |
| ய‡ | ,, | V. கோவிந்தசாமி நாயுடு | ,, | உத்தியோகம் ஷை |
| கக‡ | ,, | ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை | ,, | வியாபாரம், ஷை |
| கஉ‡ | ,, | L. சொக்கலிங்கம் பிள்ளை | ,, | மாணவர், ஷை |
| கங‡ | ,, | பொ சுப்பிரமணிய பிள்ளை | ,, | உத்தியோகம், ஷை |
| கச‡* | ,, | கோ. கோபாலகிருஷ்ணபிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| கரு‡* | ,, | நா. துரைசாமி பிள்ளை | ,, | ஷை ஷை |
| கசு | ,, | பக்கீர்மகம்மது சாஹீப் | ,, | மிராசுதார். வல்லம். |
| கஎ‡* | ,, | E. R. நடேச பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம் |
| கஅ‡* | ,, | P. கோவிந்தராஜன் | ,, | உபாத்தியாயர். ஷை |
| ககூ‡ | ,, | மு. பாலகிருஷ்ண பிள்ளை | ,, | வியாபாரம், கரந்தை. |
| உய‡ | ,, | வீ. சு. சிதம்பரம் பிள்ளை | ,, | ஷை ஷை |
| உக | ,, | சி. சிவராமகிருஷ்ணபிள்ளை | ,, | வைத்தியர், கோட்டை. |
| உஉ‡ | ,, | ஐ குமாரசாமி பிள்ளை | ,, | B. A., வக்கீல், கரந்தை. |
| உங | ,, | தி. முனிசாமி முதலியார் | ,, | உத்தியோகம், மதுரை. |
| உச | ,, | அ. சுப்பையா பிள்ளை | ,, | வியாபாரம், அறந்தாங்கி. |
| உரு | ,, | ச. சண்முகம் பிள்ளை | , | ஷை கோட்டை |
| உசு | ,, | அ. பாலசுப்பிரமணிய பிள்ளை | ,, | உத்தியோகம், மதுரை. |
| உஎ* | ,, | தி. பொ. இராமலிங்கம்பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம் |
| உஅ | ,, | ம. தா. மதார் சாஹீப் | ,, | வியாபாரம், வல்லம். |
| உகூ | ,, | ஆ. மாணிக்கஞ் செட்டியார் | ,, | ஷை ஷை |
| ஙய | ,, | வை. அரங்கசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், தச்சன் குறிச்சி. |
| ஙக‡ | ,, | அ. திருவேங்கடஞ்செட்டியார் | ,, | வியாபாரம், கரந்தை. |
| ஙஉ | ,, | த. அ. நாராயணசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், மதுரை. |
| ஙங* | , | N. சுப்பிரமணிய பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ஙச* | ,, | T. A. சம்பந்தம் பிள்ளை | ,, | ஷை ஷை |
| ஙரு | ,, | E. R. பொன்னுச்சாமி பிள்ளை | ,, | மிராசுதார், செங்கமேடு. |
| ஙசு* | ,, | மு. அருணாசலம் பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம் |
| ஙஎ | ,, | ச. அ. சாம்பசிவம் பிள்ளை | ,, | ஷை சயபுரம் |
| ஙஅ | ,, | த. பீ. சோமநாதராவ் | ,, | வியாபாரம், தஞ்சை. |
| ஙகூ | ,, | D. கந்தசாமி பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| சய | ,, | J. நடேசபிள்ளை | ,, | ஷை தஞ்சை. |
| சக* | ,, | அ. சதாசிவம் பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| ௪௨ | ஸ்ரீமான் | ச. சந்திரசேகரம் பிள்ளை அவர்கள், | | உத்தியோகம், கோலூர். |
| ௪௩ | ,, | D. இரத்தினம் பிள்ளை | ,, | ஷை குளித்தலை. |
| ௪௪ | ,, | T. M. இராம்தாஸ்ராவ் மாடிக் | ,, | ஷை தஞ்சை. |
| ௪௫‡ | ,, | V. பிச்சைமுத்து முதலியார் | ,, | மிராசுதார், வாகுகோட்டை |
| ௪௬‡ | ,, | அ. சகாயப் பிள்ளை | ,, | B. A., B L., வக்கீல், தஞ்சை. |
| ௪௭ | ,, | அ. அனந்த விசய முதலியார் | ,, | வியாபாரம், கரந்தை. |
| ௪௮ | ,, | ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளை | ,, | B. A வக்கீல், கருவூர். |
| ௪௯ | ,, | R. திருஞானம் பிள்ளை | ,, | உத்தியோகம், தனுக்கோடி |
| ௫௰ | ,, | கோ சுப்பிரமணிய பிள்ளை | ,, | வியாபாரம், மன்னார்குடி. |
| ௫௧ | ,, | சொ. முத்தையா பிள்ளை | ,, | ஒப்பந்தவேலை, தனுக்கோடி. |
| ௫௨ | ,, | க. சாமிநாத பிள்ளை | ,, | உபாத்தியாயர், ஆலத்தூர் |
| ௫௩ | ,, | வே. கந்தசாமிச்சேர்வைகாரர் | ,, | மிராசுதார், ஆலங்குடி. |
| ௫௪ | ,, | மு. அண்ணுசாமி நாயுடு | ,, | உத்தியோகம். தனுக்கோடி |
| ௫௫ | ,, | கு. பேச்சுமுத்துப் பிள்ளை | ,, | வியாபாரம், சுங்கர்திடல். |
| ௫௬ | ,, | மு. இரத்தினசபாபதி பிள்ளை | ,, | உத்தியோகம், மாதவ பேரிடா |
| ௫௭ | ,, | அ. பாலசுப்பிரமணியபிள்ளை | ,, | உபாத்தியாயர், கும்பகோணம். |
| ௫௮‡ | ,, | வீ. நாராயணசாமி பிள்ளை | ,, | மிராசுதார், பட்டுக் கோட்டை |
| ௫௯‡ | ,, | த. கி. அருணுசலம் பிள்ளை | ,, | உத்தியோகம், தஞ்சை. |
| ௬௰‡ | ,, | V. பெரியசாமி பிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| ௬௧ | ,, | ம. சாமிக்குச்சிராயர் | ,, | மிராசுதார், குருங்களூர். |
| ௬௨ | ,, | பொ. சொக்கலிங்கம்பிள்ளை | ,, | ஷை கூடலூர். |
| ௬௩ | ,, | சி. சாமியையாத் தேவர் | ,, | ஷை அருந்தவபுரம் |
| ௬௪ | ,, | S. கோவிந்தசாமிச்செட்டியார் | ,, | உத்தியோகம், பள்ளியக் கிரகாரம். |
| ௬௫‡* | ,, | ச. கோபால பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ௬௬‡ | ,, | ம. உலகநாத பிள்ளை | ,, | வியாபாரம், தஞ்சை. |
| ௬௭‡ | ,, | M. S. கலியாணசுந்தரமையர் | ,, | வக்கீல், கரந்தை. |
| ௬௮ | ,, | நா. கோதண்டபாணிப்பிள்ளை | ,, | உத்தியோகம், தனுக்கோடி |
| ௬௯ | ,, | அ. சாமிராவ் | ,, | ஷை தஞ்சை. |
| ௭௰‡* | ,, | அ. மதுரைநாயகம் பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ௭௧ | ,, | க. சாமிநாத பிள்ளை | ,, | ஷை மதுரை. |
| ௭௨ | ,, | மு. நாராயணசாமி நாயுடு | ,, | ஷை வல்லம். |
| ௭௩ | ,, | அ. சுப்பராயலு நாயுடு | ,, | வியாபாரம் ஷை |
| ௭௪ | ,, | T. B. தாஸ் ராவ் | ,, | B.A., உத்தியோகம், வேதாரணியம். |
| ௭௫‡ | ,, | S. இராசகோபால பிள்ளை | ,, | ஷை தஞ்சை. |
| ௭௬‡ | ,, | T. இராசாராம் ராவ் | ,, | ஷை ஷை |
| ௭௭ | ,, | க. முத்தையா செட்டியார் | ,, | வியாபாரம், சிதம்பரம். |
| ௭௮‡ | ,, | க. சண்முகம் பிள்ளை | ,, | B. A., B L., வக்கீல், தஞ்சை. |



| | | | | |
|---|---|---|---|---|
| ௭௯‡ | ஸ்ரீமான் | T. V. சையத்மியான் சாஹீப் அவர்கள், | | உபாத்தியாயர், தஞ்சை. |
| ௮௰ | ,, | அல்லிமுத்துப் பிள்ளை | ,, | உத்தியோகம் ஷை |
| ௮௧‡ | ,, | மா. வே. கோபாலகிருஷ்ணையர் | | வியாபாரம், கரந்தை. |
| ௮௨ | ,, | T. R. விசுவநாத பிள்ளை | ,, | உத்தியோகம், நவரங்கபுரம். |
| ௮௩‡ | ,, | ஆ. சி. கங்காதர முதலியார் | ,, | ஷை தனுக்கோடி. |
| ௮௪‡ | ,, | ம. நடராச பிள்ளை | ,, | B. A., B. L., வக்கீல், தஞ்சை. |
| ௮௫ | ,, | ச. சி. பஞ்சநதம் பிள்ளை | ,, | வியாபாரம், கும்பகோணம். |
| ௮௬ | ,, | தி. சுப்புப் பிள்ளை | ,, | மாணவர், சென்னை. |
| ௮௭ | ,, | வெ. இராமச்சந்திர ராவ் | ,, | உத்தியோகம், தனுக்கோடி. |
| ௮௮ | ,, | து. சுப்புசாமி நாட்டரையர் | ,, | உபாத்தியாயர், ஆச்சாம்பட்டி. |
| ௮௯ | ,, | மு. கோவிந்தசாமி பிள்ளை | ,, | வைத்தியம், வல்லம். |
| ௯௰ | ,, | மு. அரிகரபுத்திரசெட்டியார், | | வியாபாரம் ஷை |
| ௯௧‡* | ,, | R. பஞ்சநதம் பிள்ளை | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| ௯௨* | ,, | M. நடேச முதலியார் | ,, | ஷை ஷை |
| ௯௩ | ,, | T. R. இராசரத்தினம்பிள்ளை | ,, | B. A., L. T., உபாத்தியாயர், சைதாப்பேட்டை. |
| ௯௪ | ,, | அ. சதாசிவக் கண்டியர் | ,, | மிராசுதார், ஆவாரம்பட்டி. |
| ௯௫‡ | ,, | தி. மு. நாராயணசாமிபிள்ளை | ,, | B. A., மாணவர், திருவனந்த புரம் |
| ௯௬* | ,, | S. சோமசுந்தரம் பிள்ளை | ,, | ஷை திரிசிரபுரம். |
| ௯௭* | ,, | மு. வேங்கடசாமி நாட்டார் | ,, | உபாத்தியாயர், ஷை |
| ௯௮ | ,, | M. முத்தைய நாட்டார் | ,, | மிராசுதார், அரசன்குடி. |
| ௯௯* | ,, | R. நடேச முத்திரியர் | ,, | மாணவர் திரிசிரபுரம். |
| ௱* | ,, | தி. சு. துரைசாமி பிள்ளை | ,, | மிராசுதார், ஷை |
| ௱௧ | ,, | த. பொ. கை. அழகிரிசாமி பிள்ளை | ,, | B. A, உத்தியோகம், பாவநாசம். |
| ௱௨ | ,, | சு. சாமிநாத ராவ் | ,, | ஷை தஞ்சை. |
| ௱௩ | ,, | க பொன்னுச்சாமி பிள்ளை | ,, | சங்கீதவித்துவான், தஞ்சை. |
| ௱௪ | ,, | T. V. சதாசிவப் பண்டாரத்தார் | ,, | உத்தியோகம், பாவநாசம். |
| ௱௫‡ | ,, | சா. வேங்கடராம ஐயர் | ,, | உபாத்தியாயர், கும்பகோணம். |
| ௱௬ | ,, | சா. சிவராம பிள்ளை | ,, | வியாபாரம், தஞ்சை. |
| ௱௭‡ | ,, | T. S. சுப்பையா பிள்ளை | ,, | உத்தியோகம், திருநெல்வேலி. |
| ௱௮ | ,, | T. G. மாணிக்கம் பிள்ளை | ,, | ஷை தஞ்சை. |
| ௱௯ | ,, | சொ. மதுரையா பிள்ளை | ,, | மிராசுதார், சந்தலை. |
| ௱௰ | ,, | அ. பொன்னுச்சாமிபிள்ளை | ,, | ஷை கரந்தை. |
| ௱௧௧ | ,, | வா. அப்புசாமி நாயுடு | ,, | ஷை விடையபுரம். |
| ௱௰௨ | ,, | ச. வீராசாமி நாயுடு | ,, | உத்தியோகம், நாகப்பட்டினம். |
| ௱௰௩ | ,, | T. S. சீனிவாச ராசா | ,, | ஷை ஷை |
| ௱௰௪ | ,, | S. மகாலிங்கம் பிள்ளை | ,, | உத்தியோகம், மகர்கோம்புச் சாவடி. |
| ௱௰௫ | ,, | சா. மாணிக்கம் பிள்ளை | ,, | ஷை தஞ்சை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ௱௰௬* | ஸ்ரீமான் | R. அருணசலம் பிள்ளை | அவர்கள் | உத்தியோகம், | திரிசிரபுரம். |
| ௱௰௭* | ,, | K. கிருஷ்ணமாச்சாரியார் | ,, | ஷை | ஷை |
| ௱௰௮‡ | ,, | T. G. வீரபத்திர பிள்ளை | ,, | ஷை | குளித்தலை. |
| ௱௰௯ | ,, | நா. சண்முக முதலியார் | ,, | மிராசுதார். | பனையூர். |
| ௱௨௰ | ,, | அ. சாமிநாத முதலியார் | ,, | ஷை | ஷை |
| ௱௨௰௧ | ,, | ஆ. சா. பழனியாண்டிப் பிள்ளை | ,, | ஷை | ஆற்காடு. |
| ௱௨௰௨ | ,, | அ. கிருஷ்ணசாமித்தேவர் | ,, | ஷை | வாட்டார் |
| ௱௨௰௩* | ,, | V. சுப்பராய முதலியார் | ,, | உத்தியோகம், | திரிசிரபுரம். |
| ௱௨௰௪* | ,, | தி. கூரத்தாழ்வார் முதலியார் | ,, | ஷை | ஷை |
| ௱௨௰௫ | ,, | அ. கந்தசாமி பிள்ளை | ,, | உபாத்தியாயர், | கோயமுத்தூர். |
| ௱௨௰௬ | ,, | நடேச செட்டியார் | ,, | மிராசுதார், | நீடாமங்கலம். |
| ௱௨௰௭‡* | ,, | க. கிருஷ்ண பிள்ளை | ,, | மாணவர், | திரிசிரபுரம். |
| ௱௨௰௮* | ,, | S. செல்லப்ப முதலியார் | ,, | உத்தியோகம், | ஷை |
| ௱௨௰௯ | ,, | C. சச்சிதானந்தம் பிள்ளை | ,, | ஷை | தஞ்சை. |
| ௱௩௰ | ,, | அ. சதாசிவம் பிள்ளை | ,, | ஷை | சுரக்தை. |
| ௱௩௰௧ | ,, | G. சுப்பராய பிள்ளை | ,, | ஷை | மன்னார்குடி. |
| ௱௩௰௨ | ,, | இ. மகம்மதுகன்னி சாஹீப் | ,, | வியாபாரம், | வல்லம். |
| ௱௩௰௩ | ,, | வே முத்துசாமிக் கண்டியர் | ,, | மிராசுதார், | சுங்கந்திடல் |
| ௱௩௰௪‡ | ,, | அ முருகையசெட்டியார் | ,, | ஷை | நீடாமங்கலம். |
| ௱௩௰௫ | ,, | க தம்புசாமிச்செட்டியார் | ,, | ஷை | ஷை |
| ௱௩௰௬ | ,, | S. சோமசுந்தர முதலியார் | ,, | உத்தியோகம், | தஞ்சை. |
| ௱௩௰௭ | ,, | வே. இராமச்சந்திர பிள்ளை | ,, | ஷை | மாயவரம் |
| ௱௩௰௮ | ,, | நா. பொன்னுச்சாமி பிள்ளை | ,, | வியாபாரம், | தஞ்சை. |
| ௱௩௰௯ | ,, | D. K. சுப்பையா நாயுடு | ,, | ஷை | ஷை |
| ௱௪௰ | ,, | த. சி. துரைசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், | ஷை |
| ௱௪௰௧ | ,, | சா. சச்சிதானந்தத் தஞ்சிராயர் | ,, | மிராசுதார், | கூடலூர். |
| ௱௪௰௨ | ,, | தி. முத்துக்குமாரசாமித் தஞ்சிராயர் | ,, | ஷை | ஷை |
| ௱௪௰௩ | ,, | சு. காமாட்சியா பிள்ளை | ,, | ஷை | குளமங்கலம் |
| ௱௪௰௪ | ,, | வ. சிவராம பிள்ளை | ,, | ஷை | ஆலத்தூர். |
| ௱௪௰௫ | ,, | சா. சுப்பராய பிள்ளை | ,, | வியாபாரம், | ஷை |
| ௱௪௰௬ | ,, | A. கோவிந்தசாமிபிள்ளை | ,, | மிராசுதார், | ஷை |
| ௱௪௰௭ | ,, | சி. வைத்தியலிங்கம் பிள்ளை | ,, | ஷை | ஷை |
| ௱௪௰௮ | ,, | V. சிவசாமி பிள்ளை | ,, | ஷை | ஷை |
| ௱௪௰௯ | ,, | சா. குப்புசாமிமுதலியார் | ,, | உத்தியோகம், | மணக்கால் |
| ௱௫௰ | ,, | P. சுப்பையாமுதலியார் | ,, | மிராசுதார், | ஆலத்தூர். |
| ௱௫௰௧* | ,, | P. கந்தசாமி முதலியார் | ,, | உத்தியோகம், | திரிசிரபுரம். |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ௱௫௰௨* | ஸ்ரீமான் | தே. வையாபுரி உடையார் | அவர்கள் | மிராசுதார், | மேலைக்கற் கண்டார் கோட்டை. |
| ௱௫௰௩‡ | ,, | க. அண்ணாமலைப்பிள்ளை | , | ஒப்பந்தவேலை, | கருவூர். |
| ௱௫௰௪ | ,, | நீ. ரெ. கிருஷ்ணசாமி ஐயங்கார் | ,, | B. A., B. L., வக்கீல், | மதுரை. |
| ௱௫௰௫‡ | ,, | சிவ. சோலைமுத்துப் பிள்ளை | ,, | தமிழ்ப்பண்டிதர், | தஞ்சை. |
| ௱௫௰௬ | ,, | ப. சிங்காரவேலுப்பிள்ளை | ,, | மிராசுதார், | பள்ளியக்கிரகாரம். |
| ௱௫௰௭ | ,, | வா. முத்துசாமி நாயுடு | ,, | ஷை | ஷை |
| ௱௫௰௮ | ,, | சா. சிங்காரவேலுபிள்ளை | ,, | ஷை | ஆற்காடு. |
| ௱௫௰௯‡ | ,, | நீ. கந்தசாமி பிள்ளை | ,, | மாணவர், | பள்ளியக்கிரகாரம். |
| ௱௬௰ | ,, | சு. அம்மையப்பிள்ளை | ,, | மிராசுதார், | ஷை |
| ௱௬௰௧ | ,, | சொ. கந்தசாமி பிள்ளை | ,, | வியாபாரம், | ஷை |
| ௱௬௰௨* | ,, | C. L. கிருஷ்ணசாமி முதலியார் | ,, | உத்தியோகம், | திரிசிரபுரம். |
| ௱௬௰௩‡ | ,, | A. V. பன்னீர்ச்செல்வ உடையார் | ,, | Bar-at-Law, | தஞ்சை. |
| ௱௬௰௪* | ,, | G. சின்னையசெட்டியார் | ,, | உத்தியோகம், | திரிசிரபுரம். |
| ௱௬௰௫* | ,, | மு. குருசாமி பிள்ளை | ,, | ஷை | ஷை |
| ௱௬௰௬ | ,, | N. சுந்தரராஜலு நாயுடு | ,, | மிராசுதார், | ஒட்டர் பாளையம். |
| ௱௬௰௭‡ | ,, | N. S. முத்துசாமிநாடார் | ,, | உத்தியோகம், | காந்தை. |
| ௱௬௰௮‡ | ,, | ச. மாரிமுத்து நாடார் | ,, | வியாபாரம், | விருதுபட்டி. |
| ௱௬௰௯ | ,, | பொ. மாணிக்கம் செட்டியார் | ,, | ஷை | தாதம்பேட்டைப் பழுவூர். |
| ௱௭௰ | ,, | தாமஸ்கதிர்வேல்நாயனார் | ,, | B.A. உத்தியோகம், | வரலாசாநகரம். |
| ௱௭௰௧ | ,, | கி. அரங்கசாமி பிள்ளை | ,, | மிராசுதார், | திருவாலம்பொழில். |
| ௱௭௰௨‡ | ,, | T. G. நாராயணசாமி பிள்ளை | ,, | மிராசுதார், | காந்தை. |
| ௱௭௰௩ | ,, | L. உலகநாத பிள்ளை | ,, | தமிழ்ப்பண்டிதர், | தஞ்சை. |
| ௱௭௰௪‡ | ,, | B. S. ஆறுமுகம்பிள்ளை | ,, | மிராசுதார், | சித்தர்காடு. |
| ௱௭௰௫‡ | ,, | P. தெய்வநாயகம்பிள்ளை | ,, | ஷை | ஆலங்குடி. |
| ௱௭௰௬* | ,, | R. கோவிந்தசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், | திரிசிரபுரம். |
| ௱௭௰௭ | ,, | R. கோபாலசாமி ராவ் | ,, | ஷை | தஞ்சை. |
| ௱௭௰௮‡ | ,, | வே. ஆ. அற்புதம்பிள்ளை | ,, | ஷை | மகர்நோம்புச்சாவடி. |
| ௱௭௰௯‡ | ஸ்ரீமதி | சண்பகவல்லி அம்மாள் | ,, | குடித்தனம், | தனுக்கோடி. |
| ௱௮௰‡ | ஸ்ரீமான் | பெ. ரி. கிருஷ்ண பிள்ளை | ,, | வியாபாரம், | காந்தை. |
| ௱௮௰௧‡ | ,, | சா. சச்சிதானந்தம் பிள்ளை | ,, | ஷை | தஞ்சை. |
| ௱௮௰௨‡ | ,, | தி. செ. இராமசாமி பிள்ளை | ,, | உத்தியோகம், | தனுக்கோடி. |
| ௱௮௰௩ | ,, | S. கிருஷ்ணமூர்த்தி ஐயர் | ,, | ஷை | ஷை |

| | | | | |
|---|---|---|---|---|
| ௱அச‡ | ஸ்ரீமான் | A. S. அழகண்ணன் செட்டியார் அவர்கள் | | வியாபாரம், போதிராயக்கனூர், ஆயுட்கால அங்கத்தினர். |
| ௱அரு‡ | ,, | ஸ்ரீ வீராச்சாமி பிள்ளை | ,, | உத்தியோகம், தஞ்சை. |
| ௱அசு‡ | ,, | ஆ. சுப்பிரமணியபிள்ளை | ,, | B. A., உத்தியோகம், தஞ்சை. |
| ௱அஎ‡ | ,, | க வீரப்பிள்ளை | ,, | வைத்தியம், திட்டை. |
| ௱அஅ* | ,, | V. தியாகராசர் | ,, | உத்தியோகம், திரிசிரபுரம். |
| ௱அக* | ,, | N. குப்புசாமி நாயுடு | ,, | ஷை ஷை |
| ௱கூ௰‡* | ,, | K. திருமலைசாமி நாயுடு | ,, | ஷை ஷை |
| ௱கூக‡* | ,, | K. சாமி நாயுடு | ,, | வியாபாரம், ஷை |
| ௱கூஉ* | ,, | M. பெரியசாமி பிள்ளை | ,, | உபாத்தியாயர், ஷை |
| ௱கூங | ,, | M. மாரிமுத்துப்பிள்ளை | ,, | உத்தியோகம், தஞ்சை. |
| ௱கூச | ,, | த. ச. புருஷோத்தம பிள்ளை | ,, | ஷை ஷை |
| ௱கூரு | ,, | N. கந்தசாமிபிள்ளை | ,, | ஷை பாளையங்கோட்டை. |
| ௱கூசு | ,, | K. அருணசடேசம் பிள்ளை | ,, | ஷை தஞ்சை. |
| ௱கூஎ | ,, | மு. கலியாணசுந்தரம் பிள்ளை | ,, | ஷை ஷை |
| ௱கூஅ* | ,, | K. முத்துக்குமரசாமி பிள்ளை | ,, | ஷை திரிசுரபுரம். |
| ௱கூகூ | ,, | S. V. இராசகோபால பாகவதர் | ,, | வியாபாரம், மகர்நோம்புச்சாவடி. |

---

‡ புத்தகசாலைக்கும் அங்கத்தினர். * திருச்சிகிளை அங்கத்தினர்.

## சேர்ப்பு உ.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

### நள வருடத்தில் புத்தகங்கள் உதவியவர்களின் விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க. | கரந்தைத் தமிழ்ச்சங்கம் (விலைக்கு வாங்கியனவும், பிறவும்) | | | | 51 |
| உ. | ஸ்ரீமான் | T. N. வேங்கடசாமி நாயுடு அவர்கள், B. A., டிப்டி | | கலெக்டர், தருமாவரம் | 41 |
| ங. | ,, | த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L., | | கரந்தை | 18 |
| ச. | ,, | நா. கணபதியா பிள்ளை | ,, | கரந்தை | 18 |
| ரு. | ,, | தி. செல்வக்கேசவராய முதலியார் | ,, | M.A., சென்னை | 11 |
| சு | ,, | T.V. சதாசிவப்பண்டாரத்தார் | ,, | திருப்புறம்பயம் | 7 |
| எ | ,, | பொ. சுப்பிரமணிய பிள்ளை | ,, | கரந்தை | 6 |
| அ. | ,, | T. N. சுப்பிரமணிய பிள்ளை | ,, | திரிசிரபுரம் | 4 |
| கூ. | மதுரைத்தமிழ்ச்சங்கம் | | | | 4 |
| ௰. | ஸ்ரீமான் | M. R. நடேச பிள்ளை | அவர்கள் | மன்னார்குடி | 4 |
| ௰க. | ,, | R. வேங்கடாசலம் பிள்ளை | ,, | மோகனூர் | 3 |
| ௰உ. | ,, | A. V. பன்னீர்ச் செல்வ உடையார் | ,, | Bar-at-Law, தஞ்சை | 3 |
| ௰ங. | ,, | அ. கணபதி பிள்ளை | ,, | திரிசிரபுரம் | 2 |
| ௰ச. | ,, | R. வேங்கடராம ஐயர் | ,, | கரந்தை | 2 |
| ௰ரு. | ,, | D. கோபால செட்டியார் | ,, | அரக்கோணம் | 2 |
| ௰சு. | ,, | வே. இராமசாமி வன்னியர் | ,, | கூடலூர் | 2 |
| ௰எ. | ,, | ஆ. சபாபதி பிள்ளை | ,, | கரந்தை | 2 |
| ௰அ. | ,, | கோ. நடேச ஐயர் | ,, | தஞ்சை | 2 |
| ௰கூ. | ,, | கு. பேச்சுமுத்துப் பிள்ளை | ,, | சுங்கந்திடல் | 1 |
| உ௰. | ,, | பா. கலியாணசுந்தரம் பிள்ளை | ,, | கரந்தை | 1 |
| உக. | ,, | மொ. பக்கிரியா பிள்ளை | ,, | ஷை | 1 |
| உஉ. | ,, | T. K. இராமசாமி | ,, | ஷை | 1 |
| உங. | ,, | இராவ் சாகிப் P. சம்பந்த முதலியார் | ,, | B.A. B.L. சென்னை | 1 |
| உச. | ,, | அ. ஐயாறுப் பிள்ளை | ,, | குளமங்கலம் | 1 |
| உரு. | பச்சையப்பர் கலாசாலைத் தமிழ்ச்சங்கம், சென்னை | | | | 1 |
| உசு. | பிரம வித்தியா புத்தகசாலை, தஞ்சை | | | | 1 |
| | | | | | 190 |

## சேர்ப்பு ௩.

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

### திரிசிரபுரம் கிளை.

பகர்ந்துலகு சீர்போற்றும் பழைடவளம் பதியாகு மிந்நகரி லிக்கிளை; அன்பானினைவாராது உள்ளக்கமலத்தின்கண், அவர்நினைந்த வடிவோடு விரைந்து சேருந்தன்மைவாய்ந்த எல்லாம்வல்ல இறைவனது திருவருள் நோக்கால், தனது நான்காவதாண்டினிறைவினைப்பெற்றது.

### ௧. அங்கத்தினர்.

சென்றவாண்டினிறுதியில் இக்கிளை அங்கத்தினராய்த்தொக்கார் முப்பதின்மராவர். இவரிலிடையே நீங்கினரொருவர். உத்தியோக நிமித்தம் வேற்றூருக்கு மாற்றப்பெற்றார் மூவர். எஞ்சி நின்ற இருபத்தறுவரொடு இக்கிளை நலங்கண்டு புதியராய்க் கூடினர் பன்னிருவராக, இவ்வாண்டினிறுதியில் உறுப்பினராயமர்ந்து நின்றார் முப்பத்தெண்மராவர்.

### ௨. கூட்டங்கள்.

இவ்வாண்டிலிக்கிளைச் சங்கத்திற்கோர் காரியதரிசி நியமிக்கவென நிகழ்ந்த காரியாலோசனைக்கூட்டமொன்றைத்தவிர வேறொன்றும் நடைபெறாதது விசனிக்கத்தக்கதொன்றாம். இனியாதல் அங்கத்தினர் பலரும் இவ்வழியில் ஊக்கங்காட்டுவார்களென நம்புகிறோம்.

### ௩. நூலாராய்ச்சி.

சில அங்கத்தினர் இந்நகர் எஸ். பி. ஜி. உயர்தரக் கலாசாலைத்தலைமைத் தமிழ்ப்பண்டிதரும், இச்சங்கத்தின் அங்கத்தினருமாகிய, கனம் மு. வேங்கடசாமி நாட்டாரவர்களை ஆசிரியராகக்கொண்டு அவர்களிடம் அறுதினமும் காலையில் முறையே திருக்குறளும், நன்னூலும், யாப்பிலக்கணமும்; பிரதி ஞாயிறு வாரங்கடோறும் மாலையில் கம்பராமாயணமும் பயின்றுவருகிறார்கள். இவ்வாறு பயின்றுவரும் உறுப்பினர்களின் தொகை பத்தேயாகும். சென்றவாண்டினறிக்கையிற் குறிப்பிட்டபடியே, உறுப்பினர் பலரும் தமது நன்மைக்குரிய இவ்வழிகளில் அவாவும் ஊக்கமுமுடையவராய்த் தமக்குவாய்த்த இவ்வரும் பேருதவியைத் தக்கவாறு உபயோகப்படுத்திக்கொள்கின்றாரில்லை. இனியாவது அங்கத்தினரெல்லோரும் இவ்வரிய பயனைப் பிரயோசனப்படுத்திக்கொள்வார்களென வேண்டப்படுகிறார்கள்.



### ௪. வருமானம்.

இக்கிளை மூலமாய் இவ்வாண்டின் வருவாய் அடியிற்காணப்படுமாறு:—

| | | | | |
|---|---|---|---|---|
| மாதச்சந்தா | ரூ. | 59 | 13 | 0 |
| புத்தகசாலைச் சந்தா | ரூ. | 6 | 8 | 0 |
| நன்கொடை | ரூ. | 22 | 14 | 0 |
| கூடுதல் | ரூ. | 89 | 3 | 0 |

செலவொன்றுமில்லை.

### ௫. பிடியரிசிக் கலையம்.

நமது தாயவையார், தமிழும் தமிழ் மக்களும் மேம்பாடடைய அன்புடன் நடாத்திவரும் பணிகளில் முதன்மையான செந்தமிழ்க்கைத்தொழிற் கலாசாலை இனிது நடைபெறுவதற்கு இன்றியமையாத்துணைக் கருவியாயுள்ள பொருளைத் தம்மாலியன்றவரை உதவித்தாயவையாரை ஊக்கப்படுத்த அவாக்கொண்டு சில அருஞ்சீலர்கள் தந்தமில்லத்தில் பிடியரிசித்தருமம் நடத்திவருகின்றமை எமக்கு மிகமகிழ்வைத்தருகின்றது. இவ்வேற்பாடு மிகவற்பமானதேனும் "பலதுளி பெருவெள்ளம்" என்ற பழஞ்சொற்கேற்ப நமது தொல்லோர்களும் இவ்வேற்பாட்டினைக் கடைப்பிடித்து அரும்பெருங் காரியங்களை யெல்லாம் செய்து முடித்திருக்கின்றார்களாகையால், தமிழ் மக்களெல்லோரும் ஒருங்கே இவ்வழியொழுகி இச்சிறு வுபகாரம் புரிவாரேல், நமது சங்கநோக்கங்களெல்லாம் முட்டின்றி நடைபெறுவதற்குச் சாதனமாயிருக்குமென்பது ஒருதலையாகலின் தமிழகத்தாரெல்லோரும் மகிழ்வுடன் முன்வந்துதவித் தம் நாட்டின் பெருமையினை நிலைநாட்டுவார்களாக

### ௬. வந்தனம்.

யாம் தமிழ்ப்பயிற்சியில் முதிர்ச்சியடையவேண்டுமென மிகப்பரிந்து எமக்குள்ளன்புடன் போதிக்குமுறையிற் சிறிதும் வழுவாது, தனது அரும்பெருங்காலத்தைத் தினமுஞ் செலவிட்டுப் பாடம் கற்பித்து வரும், எமது ஆசிரியர் பண்டிதர் கனம் மு. வேங்கடசாமி நாட்டாரவர்கட்கும், வழக்கம்போல் எமக்குவேண்டிய புத்தகம், பத்திரிகை முதலியவைகளையுதவி எங்களுக்கு நற்போதனை தந்து ஊக்கிவரும் தாய்ச்சங்கத்தார்க்கும், தமிழுக்கேயன்பு பூண்டொழுகும் எங்களருமைச் சங்கத்தலைவரவர்கட்கும், எம்மன்பார்ந்த வந்தனத்தைப் பணிவுடன் செலுத்துகின்றோம்.

(சுபம்.)

திரிசிரபுரம்,
பிங்கள ஞு
சித்திரை மீ.

E. R. நடேசன்,
கிளையமைச்சர்.

## சேர்ப்பு ச.

### கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

நள வருடத்தில் வரவு செலவு விவரம்.

| வரவு | | | | தொகை. ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|
| சென்றவருடக் கடைசியில் பாக்கி | | | | 680 | 11 | 3 |
| இவ்வருடத்தில் :— | | | | | | |
| மாதச்சந்தா | ரூ. 311 | 12 | 6 | | | |
| ஆயுட்கால அங்கத்தினர் சந்தா | ரூ. 50 | 0 | 0 | | | |
| புத்தகசாலைச் சந்தா | ரூ. 34 | 8 | 0 | 396 | 4 | 6 |
| நன்கொடை | | | | 597 | 3 | 9 |
| சேமப் பொருட்கு வட்டி | | | | 4 | 10 | 0 |
| புத்தகம் விற்றுமுதல் | | | | 3 | 10 | 0 |
| தனி | | | | 19 | 1 | 0 |
| மொத்தம் ... | | | | 1701 | 8 | 6 |

| செலவு. | தொகை. ரூ. | அ | ப. |
|---|---|---|---|
| அச்சுக்கூலி ... ... ... | 54 | 8 | 6 |
| பொதுக்கூட்டம் ... ... ... | 8 | 0 | 3 |
| சாமான்கள் ... ... ... | 57 | 8 | 9 |
| புத்தகம், பத்திரிகை ... ... | 29 | 9 | 0 |
| ஐந்தாம் ஆண்டுத்திருவிழா ... ... | 293 | 14 | 2 |
| எழுது கருவிகள் ... ... | 14 | 10 | 0 |
| தபால், தந்தி ... ... ... | 4 | 15 | 3 |
| புத்தகங் கட்டுக்கூலி ... ... | 23 | 3 | 3 |
| கல்விப்பயிற்சிக்கு உபகாரச்சம்பளம்(Scholarship)... | 18 | 0 | 0 |
| கட்டிடம் பழுதுபார்த்த செலவு .. .. | 97 | 9 | 3 |
| வினைஞர் கூலி (Staff) ... ... | 137 | 6 | 0 |
| விற்பனைக்குப் புத்தகம் வாங்கியது .. | 1 | 10 | 0 |
| விளக்கு ... ... ... | 13 | 3 | 8 |
| இறை (Tax) ... ... ... | 2 | 13 | 8 |
| சில்லரை ... ... ... | 2 | 15 | 5 |
| | 759 | 15 | 2 |
| பாக்கி இருப்பு .. | 941 | 9 | 4 |
| மொத்தம் ... | 1701 | 8 | 6 |

தஞ்சை, கரந்தை,
பிங்கள ஹூ வைகாசிமீ செல }

அ. கணபதி,
அமைச்சர்.

ஆ. ச. ஆறுமுகம் பிள்ளை,
நிதிக்கிழவர்.

பரிசோதனையிற் சரியெனக் காணலாயிற்று.

பா. கல்யாணசுந்தரம்,
கணக்குப்பரிசோதகர்.

# ஒரு புதுமை!

## கண்டுபிடித்தாயிற்று !!

தம் உன்னத நிலையிலிருந்து காலகதியால் தாழ்ந்திருக்கும் தமிழும், தமிழரும் உய்ந் துயருமாறு கண்டுபிடித்தாயிற்று !

* * *

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் குறித்துள்ள தனித்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி யாகிய அருமருந்து. ! !

* * *

வினைமுடிக்கச் சிறிபம் என்றெண்ணற்க

* * *

சிற்றுளியால் கல்லும் தகரும்.

* * *

நீவிர் பெருங்குடி வந்தீர் !

நும்மாற்றல் சாலப் பெரிது !!

* * *

தாழ்க்காது வம்மின் ! வம்மின் !!

* * *

பழியஞ்சிப் பறந்து வம்மின் !

* * *

வாவேற்றுப் பழியகற்றும்

## கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

# தமிழ்.

சங்கநிதி பதுமநிதி
யிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத்
தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம்
மதிப்போம் அல்லேம்
மாதமிழுக் கேகாந்தர்
அல்ல ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு
தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும்
புலைய ரேனும்
தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர்
அன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங்
கடவு ளாரே.

G. S. M. & CO., TANJORE.

in respect of this item will be noted.

As regards (2), no precedents are traceable for the supply of Govt. publications to private bodies at concession rates. Even otherwise the request is very vague since the Sangam does not say specifically what publications (are required to equip its Library.) ~~it wants~~. Perhaps the Sangam might be asked to furnish a list of the publications it requires. The question may then be considered whether they may be supplied ~~supplied~~ free, or otherwise. ~~at concession rates~~.

As regards (3), the distribution of the texts of inscriptions has not yet been settled. Perhaps this request may be borne in mind when the general distribution is drawn up; ~~or~~ unless any immediate ~~refer~~; ~~may be made~~ to the A. A. S. for Epigraphy is ordered.

3 Subject to orders a draft is subd:.

13.9.18. 20.9.18

17.9.18. Let the draft issue but I should say, on first consideration, that I see no reason whatsoever to give these books & publications free to the Sangam 23/9/18

Books & Public.ns — Sectt. 11-10 (b)—1-17. • ~~Home~~ DEPARTMENT. (Edn.)

Informing the President of the Karanthai Tamil Sangam that its request to be supplied with copies of the Ephemeris and the ~~lists~~ transcripts of epigraphical inscriptions will receive consideration.

READ AGAIN G.O. No. ........, dated ........ 191 .

" " " " ........, " ........ 191 .

READ ALSO:—

C. No. 1875/B, From the President of the Karanthai Tamil Sangam, No. ........, dated 1-9-1918

" " ........, " " ........, " ........ 191 .

" " ........, " " ........, " ........ 191 .

**ORDER.** No. 1271, dated 23-9-1918.

MCS.

The President of the Karanthai Tamil Sangam is informed that its request for the free supply of copies of the Ephemeris and the transcripts ~~lists~~ of epigraphical inscriptions will be noted for consideration when orders are passed on fixing their general distribution.

2. The aforesaid further ~~lists~~ request of the Sangam for the supply of Govt. publications on "Antiquities and Research" ~~cannot be considered~~ ~~unless Govt. ...~~

The President is requested to submit a list showing the specific publications required by it.

~~is submitted to Govt.~~

13-9-18

20-9-18

23/9/18

To the President of the Karanthai Tamil Sangam.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

THE KARANTHAI TAMIL SANGAM TANJORE.

4 OCT 1918

கரந்தட்டாங்குடி, 1st October, 1918.

From

M.R.Ry., T.V. Umamaheswaram Pillai, Avl., B.A., B.L.,

President, Karanthai Tamil Sangam,

To

The Hon'ble The Secretary to Government,

Home (Education) Department,

Madras.

Sir,

I have the honor to acknowledge the receipt of G.O.No. 1271 of 23rd September, 1918, regarding the supply of copies of Ephemeries and the transcripts of epigraphical inscriptions and to thank you for the same.

2. With reference to para 2 of the G.O., a list of the publications required by the Sangam will be prepared and submitted as desired.

I have the honor to be,

Sir,

Your most obedient servant,

Ganapati

for President.

Home (Edn.)

Lodged.

8-10-18.

10/10/18

Note:- To be stitched with G.O. No. 1271 Edn. d/23-9-18.

*When given for copying*
*When copied*
*When examined* 191
*When signed* 25/9

Read again G.O. No. , dated
191

Current No.

Enclosures to C. No.

Order of Government .. .. .. A A A A A A A

Letter of Government

Statement with ditto.

Papers not filed up, being meant for dispatch in original.

*N.B.*—
A = Copy in full.
B = Not to be copied.
P = Copy abstract only.
Q = Copy heading only.